பக்கங்கள்: 13

# காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 06 வள்ளுவர் ஆண்டு 2053 ஐப்பசி 18 வெள்ளிக்கிழமை 04.11.2022 கதிர் 362

### இது ரகசியம் அல்ல!

நீதித்துறையில் இரண்டு முக்கிய மகா வாக்கியங்கள் உண்டு.

ஒன்று - 'நீதி நிலைநாட்டப்படுவது மட்டுமின்றி, நிலை நாட்டப்படுவது போல காட்டப்படவும் வேண்டும்.'

அடுத்தது - 'தாமதிக்கப்பட்ட நீதி மறுக்கப்பட்ட நீதி ☞2

# சீனாவின் போர்க்கப்பல்களுக்கு எரிபொருள்களை நடுக்கடலில் இலங்கை கரவாக வழங்குகின்றதாம்!

## இந்தியத் தரப்பு கொழும்பிடம் கடும் அதிருப்தி தெரிவிப்பு

கொழும்பு,நவ.04

சீனாவின் போர்க்கப்பல்களிற்கு இலங்கை நடுக்கடலில் எரிபொருள் நிரப்புவது குறித்து இந்தியா கடும் அதிருப்தி வெளியிட்டுள்ளது.

இந்தியா கடும் எதிர்ப்பை தெரிவித்த போதிலும் சீனாவின் ஏவுகணை கண்காணிப்பு கப்பலான வாங் யுவாங் 5 அம்பாந்தோட்டை துறைமுகத்தில் தரிப்பதற்கு இலங்கை அனுமதி வழங்கியதை தொடர்ந்து இலங்கை தனது துறைமுகத்தில் போர் மூலோபாய கண்காணிப்பு கப்பல்களிற்கு அனுமதி வழங்கக்கூடாது என இந்தியாவும் அமெரிக்காவும் தெளிவாக தெரிவித்துள்ளன.

சீனா குத்தகைக்கு எடுத்துள்ள அம்பாந்தோட்டை துறைமுகத்திலிருந்து எரிபொருள்களை ஏற்றிக் கொண்டு செல்லும் எரிபொருள் கப்பல்கள் சீனாவின் போர்க்கப்பல்களிற்கு நடுக்கடலில் வைத்து ☞2

# நாடாளுமன்று மெத்தனம் ஜனாதிபதிக்கு அதிருப்தி!

## விசனம் தெரிவித்து அவர் சபாநாயகருக்குக் கடிதம்



கொழும்பு,நவம்பர்04

நாடாளுமன்றத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தும் கட்சிகளின் தலைவர்களுடன் கலந்துரையாடிய பின்னர் நாட்டில் நீண்டகால முறைமை மாற்றங்களை (Far Reaching Systematic Changes) ஏற்படுத்தும் நோக்கில் முன்வைக்கப்பட்ட முன்மொழிவுகளை அமுல்படுத்துவதில் திருப்திகரமான முன்னேற்றம் ஏற்படவில்லை என ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் தமது அதிருப்தியை சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தனவுக்கு ஜனாதிபதி எழுத்து மூலம் அறிவித்துள்ளார். ☞2



## வடக்கு - கிழக்கு பல்கலை மாணவர்கள் கூடிப் பேச்சு

யாழ் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்திற்கும் மட்டக்களப்பு கிழக்கு பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்திற்கும் இடையிலான சிநேகபூர்வ கலந்துரையாடல் நேற்று யாழ் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியக் கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது. ☞2

## வந்துள்ள மசகு எண்ணையின் தர நிலை குறித்து பிரச்சினை



இறக்குமதி செய்யப்பட்ட மசகு எண்ணெய் கப்பல் ஒன்று 45 நாள்களுக்கும் மேலாக இலங்கை கடற்பரப்பில் நங்கூரமிடப்பட்டுள்ளதாக ☞2

## இடியன் துப்பாக்கியுடன் பளையில் ஒருவர் கைது

பளை - முகாவில் பகுதியில் நபர் வீட்டில் வாள் மற்றும் இடியன் துப்பாக்கி வைத்திருப்பதாக பளை பொலிஸாருக்கு கிடைக்கப்பெற்ற இரகசிய தகவலையடுத்து நேற்று முன்தினம் மாலை குறித்த வீட்டை சோதனையிட்ட பொலிஸார் சந்தேக நபரைஜ் கைது செய்துள்ளமையோடு, வாள் மற்றும் துப்பாக்கியைக கைப்பற்றியுள்ளனர்.

## 25 கிலோ ஹெரோயினுடன் கொக்கலவில் இருவர் கைது

25 கிலோ ஹெரோயினுடன் இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர். கொக்கல பிரதேசத்தில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பின் போதே இவர்கள் கைது செய்யப்பட்டஅர் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

சம்பவம் தொடர்பில் அம்பலாந்தொட்ட பொலிஸார் மேலதிக விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.

# இம்ரான்கானின் மீது துப்பாக்கிச் சூடு காலில் காயத்தோடு அவர் தப்பினார்!

## ஒருவர் பலி; அறுவர் காயம்; சுட்டவர் சிக்கினார்




காயமடைந்த பிரிஜ பிரமுகர் பைசால் ஜாவித்



காயமடைந்த இம்ரான் கான் கொள்கலன் வாகனத்துக்குள்



ஆஸ்பத்திரியில் இம்ரான்

பாகிஸ்தானின் முன்னாள் பிரதமர் இம்ரான் கான் துப்பாக்கிச் சூட்டில் காயமடைந்துள்ளார். படுகொலை முயற்சியில் அவர் தப்பிப் பிழைத்தார் எனினும் காலில் ☞2

### இம்ரானை கொல்லவே வந்தேன் கைதான இளைஞர் தெரிவிப்பு



இம்ரான் கான் மீது சூடு நடத்திய வாலிபர் கைது செய்யப்பட்டுள்ளார்.

தாக்குதல் நடத்திய வாலிபர், யாரும் தன்னை தூண்டிவிடவில்லை என்றும், இம்ரான் கான் ☞12

# முடிவுகளை கொள்கை சார்ந்து எடுப்பதா? அல்லது தனிப் பிரமுகர் சார்ந்து எடுப்பதா?

## சிறீதரன் எம்.பியிடம் கலாநிதி சர்வேஸ்வரன் கேள்வி





முடிவுகளை கொள்கை சார்ந்து எடுப்பதா? நபர் சார்ந்து எடுப்பதா? - என்று எம்.பி. சிறீதரனிடம் கேள்வி எழுப்பியிருக்கின்றார் ஈ.பி.ஆர்.எல்.எவ்வின் கலாநிதி சர்வேஸ்வரன்.

அண்மையில் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் யாழ்ப்பாண மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் தொலைக்காட்சி நிகழ்ச்சிக்கான செவ்வி ஒன்றில் சுமந்திரன் யாருடனும் கலந்தாலோசிக்காமல் தானாகவே முடிவுகளை எடுக்கிறார் எனவும் இனிவரும் காலங்களில் சுமந்திரனின் முடிவை ஏற்கமாட்டோம் என்றும், அவரது முடிவுகளுக்கு எதிராகவே செயற்பட உள்ளனர் எனவும் தெரிவித்திருந்தார்.

அத்துடன் ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் ☞12

காலைக்கதிர் Kalaikkathir

## இனி இது .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஆகிவிடும்.'

இவற்றை இங்கு குறிப்பிடுவதற்குக் காரணங்கள் உண்டு.

மக்களின்இறைமையைப்பிரயோகிக் கும் முறைமை குறித்து அரசமைப்பின் முதலாம் அத்தியாயத்தின் நாலாவது சரத்து விளக்கமாகக் கூறுகின்றது. அதன் பிரகாரம், 'மக்களின் நீதித்துறைத் தத்துவமானது சட்டத்தால் தாபிக்கப்பட்ட நீதிமன்றங்கள் மூலம், நாடாளுமன்றத்தினால் பிரயோகிக்கப்பட வேண்டும்.

அதாவது நீதித்துறை சரியான முறையில் செயல்படுவதற்குப் பொறுப்பு நாடாளுமன்றத்துக்கு உரியது. ஆனால் அந்த விடயத்தில் நாடாளுமன்றம் சிரத்தை எடுப்பதே இல்லை என்பதுதான் இங்கு நிலைமை.

தன்னுடைய விடயத்தில் கூட அந்த நீதி சரியாக நிலைநாட்டப்பட வேண்டும் என்பதை உறுதிப்படுத்தும் பொறுப்பு நாடாளுமன்றத்திற்கு இருப்பதாகத் தெரியவில்லை.

மாவட்ட ரீதியிலோ, தேசிய பட்டியல் மூலமாகவோ ஒரு கட்சியின் சார்பில் தெரிவான நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவர் கட்சியின் முடிவுக்கு மாறாகச் செயற்பட்டார் என்ற காரணத்துக்காக, கட்சியிலிருந்து நீக்கப்பட்டால், அவர் அந்தக் கட்சி மூலம் கிடைத்த எம்.பி. பதவியையும் இழந்தவராவார் என்பதுதான் இங்குள்ள சட்ட ஒழுங்கு.

ஆனால் இந்த விடயத்தில் காலத்தை இழுத்தடித்து, நீதியே நிலைநாட்டப்படாத சூழலை உருவாக்கிக் கொடுத்துவிட்டு, நாடாளுமன்றமும் நமது நீதித் துறையும் படுத்து உறங்குகின்றன.

ஒரு நாடாளுமன்ற உறுப்பினருக்கு எதிராக சட்ட ரீதியான நடவடிக்கை எடுக்கப்பட்டாலும், அந்த நாடாளுமன்றப் பதவிக்காலம் முடிவடையும் வரை, அந்தப் பிரச்சினை தீர்க்கப்படாமல் இருப்பதை நீதிமன்றம் காலத்தை இழுத்தடித்துப் பார்த்துக் கொள்ளும். நாடாளுமன்றமும் அது பற்றிக் கேட்காமல் நித்திரை கொள்ளும்.

இப்போதைய நாடாளுமன்றத்தின் தொடக்கத்திலேயே பிரதான எதிரணியான ஐக்கிய மக்கள் சக்தி மூலம் எம். பியான டயானா கமகே, அணி மாறிச் செயல்பட்டார். ஒரு வருடத்திற்கு முன்னரே கட்சி அவரை வெளியேற்றியது. அதற்கு எதிராக அவர் நீதிமன்றத்திற்குப் போயிருக்கின்றார். இந்த நாடாளுமன்றத்தின் பதவிக்காலம் 2025 ஒகஸ்டில் முடியும் வரை, இந்தத் தாவா தீர்க்கப்படவே மாட்டாது என்று அடித்துக் கூறலாம். இழுத்தடித்து, சமா பண்ண, நீதிமன்றங்களும் தவறவே மாட்டா என்று உறுதியாகக் கூறலாம்.

தம்மைக் கட்சியிலிருந்து வெளியேற்றியமைக்கு எதிராகத் அவர் தாக்கல் செய்த வழக்கு, அந்த வெளியேற்றம் நடந்து சரியாக ஒரு வருடத்தின் பின்னர் இப் போது தான் விசாரணைக்கு ஏற்றுக் கொள்ளப்பட்டிருக்கிறது.

முதல் விசாரணை திகதி, ஆரம்பக் கட்டமாக நான்கு மாதங்கள் தள்ளிப் போடப்பட்டு, மார்ச் முற்பகுதிக்கு வழக்கு ஒத்தி வைக்கப்பட்டுள்ளது.

இனி வாய்தாக்கள், மனுக்கள், பிரதி மனுக்கள், விளக்கம், விளக்கத்தை ஒட்டிய மனுக்கள் என்று தீர்ப்பு வருவதற்கு இன்னும் இரண்டு ஆண்டுகள் ஒழிவிடும். பிறகென்ன? அந்தத் தீர்ப்பை எதிர்த்து மேன்முறையீடு. அந்த மேல்முறையீட்டை விசாரணைக்கு ஏற்பதா என்ற பிரச்சினை. விசாரணைக்கு ஏற்றுக் கொள்ளப்பட்டால், அதற்கு எழுத்து மூலம் சமர்ப்பணம், பதில் சமர்ப்பணம், விசாரணை என்று தற்போதைய நாடாளுமன்றத்திலன் பதவிக்காலம் தாண்டியும் விவகாரம் நிச்சயமாகத் தொடரும்.

இந்த நாடாளுமன்றத்தின் பதவிக் காலம் முடிவடைந்து, மனுதாரரோ அல்லது எதிர்மனுதாரரோ நீதி தாமதிக்கப் பட்டமையால் மறுக்கப்பட்டு விட்டது என்ற வேதனையுடன் வீட்டுக்குப் போக வேண்டியதுதான்.

இத்தகைய மோசமான பிரச்சினை நீதித்துறையில் இருக்கின்றது என்று தெரிந்தும் அதை நிவர்த்தி செய்ய எந்த நீதித்துறை அமைப்பும் முன் வரவில்லை என்பதுதான் நமது துன்பியல் நிலைமையாகும்.

நாடாளுமன்றமும் திருந்தாது; நீதித் துறையும் மாறாது என்பதுதான் வேதனை.

இன்னொரு விடயமும் உண்டு. அது நாடாளுமன்றத்தின் சுயநலப் போக்கு.

நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவர் தொடர்பான நடவடிக்கை என்றால்தான் இத்துணை சட்ட இழுபறி, காலதாமதம் எல்லாவற்றுக்கும் வாய்ப்பு. இதுவே உள்ளூராட்சி உறுப்பினர் ஒருவர் விடயம் என்றால் வழக்கு, நீதி விசாரணை எல்லாம் நிலுவையில் இருக்க, முதலில் அந்த உறுப்பினர் பதவி இழக்க வேண்டியதுதான். அதுதான் நாடாளுமன்றுக்கும் உள்ளூராட்சி மன்றத்திற்கும் சட்டத்தை கையாள்கையில் உள்ள வேறுபாடு.

இப்போது நான் ஆரம்பத்தில் குறிப்பிட்ட நீதித்துறையின் இரண்டு மகா வாக்கியங்களையும் ஒரு தடவை உருப்போட்டுப் பாருங்கள். நமது நாட்டின் நிலைமை - நீதித்துறை - இப்படித்தான் இருக்கின்றது.

- மின்னல் -

## சீனாவின் போர்க்கப்பல் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மறைமுகமாக எரிபொருள்களை நிரப்புகின்றன என இந்தியா தெரிவித்துள்ளதுடன் இது குறித்து இலங்கையிடம் கடும் கரிசனை வெளியிட்டுள்ளது.

கப்பல்களை தனது துறைமுகத்திற்குள் அனுமதிப்பது மற்றும் அவற்றிற்கு எரிபொருள் நிரப்புவது போன்ற விடயங்களில் வெளிப்படையான தராதர நடைமுறையை பின்பற்றவேண்டும் என இலங்கை இந்தியாவிடம் வேண்டுகோள் விடுத்துள்ளது என இராஜதந்திர வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

சீனாவின் போர்க்கப்பல்கள் இலங்கை துறைமுகத்தில் தரித்து நிற்பதற்கும் அம்பாந்தோட்டை துறைமுகத்தில் மீள எரிபொருளை நிரப்புவதற்கும் அனுமதிக்கவேண்டாம் என இந்தியா இலங்கையிடம் தெரிவித்துள்ளது.

அம்பாந்தோட்டையிலிருந்து எரிபொருளுடன் செல்லும் இலங்கை கப்பல்கள் இந்திய, அமெரிக்க கரிசனைகளை புறக்கணித்து சீன போர்க்கப்பல்களிற்கு எரிபொருளை வழங்குகின்றன என்பது அவதானிக்கப்பட்டுள்ளது.

கிழக்கு ஆபிரிக்க கடலோர பகுதியில் கடற்கொள்ளையர்களிற்கு எதிரான நடவடிக்கையில் ஈடுபட்டுள்ள சீன கப்பல்களை தவிர தற்போது இந்து சமுத்திரத்தில் எந்த சீன கப்பல்களும் இல்லை என்பது தெரியவந்துள்ளது.

சீனப் போர்க்கப்பல்கள் தொடர்ந்தும் கிழக்கு ஆபிரிக்க கடலோரம் போன்ற பகுதிகளில் காணப்படுகின்றன. ஆனால் அந்த பகுதியில் கடற்கொள்ளையர்களின் நடவடிக்கைகள் எதுவுமில்லை. துறைமுகத்தை கைப்பற்றுவதற்காக கடற்கொள்ளையர்களிற்கு எதிரான நடவடிக்கை என சீனா சாக்குப்போக்கு சொல்கின்றது என சீனாவை அவதானிப்பவர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

## நாடாளுமன்று ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இந்த முன்மொழிவுகளில், தேசிய சபையை ஸ்தாபிக்கும் நடவடிக்கை மாத்திரமே இதுவரையில் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளதாக ஜனாதிபதி நேற்று அனுப்பியுள்ள இந்த எழுத்துமூல அறிவிப்பில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

நீண்டகால முறைமை மாற்றங்களை ஏற்படுத்தும் நோக்கில் முன்மொழியப்பட்ட யோசனைகளில் வங்கி விவகார மற்றும் நிதிச் சேவைகள் தொடர்பான குழு (Committee on Banking and Financial Services), பொருளாதார ஸ்திரப்படுத்தல் தொடர்பான குழு (Committee on Economic Stabilization) மற்றும் வழிகள் மற்றும் வழிமுறைகள் தொடர்பான குழு (Committee on Ways and Means) ஆகியவற்றை வங்கி விவகாரங்கள் தொடர்பில் நியமிப்பதற்கு முன்மொழியப்பட்டாலும் அவை இதுவரை முன்னெடுக்கப்படவில்லை எனவும் ஜனாதிபதி சபாநாயகருக்கு சுட்டிக்காட்டியுள்ளார்.

அத்தோடு துறைசார் மேற்பார்வைக் குழுக்களுக்கு ஐந்து இளைஞர் பிரதிநிதிகளை நியமிக்கவும், நாடாளுமன்ற வரவு - செலவுத் திட்ட அலுவலகத்தை நிறுவவும் முன்மொழியப்பட்ட போதும் அவையும் செயற்படுத்தப்படவில்லை.

இந்த பரிந்துரைகளின்படி 17 நாடாளுமன்ற துறைசார் மேற்பார்வைக் குழுக்களை ஸ்தாபிக்க வேண்டியுள்ள போதிலும் அவற்றுக்கான தலைவர்கள் இதுவரை நியமிக்கப்படவில்லை எனவும் அவற்றுக்கு நியமிக்கப்படும் இளைஞர் பிரதிநிதிகளை தெரிவு செய்வதற்கான அளவுகோல் இன்னும் தயாரிக்கப்படவில்லை எனவும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

அடுத்த வருட வரவு - செலவுத் திட்டம் நடைமுறைப்படுத்தப்படும் போது இந்த முன்மொழிவுகளை நடைமுறைப்படுத்த முடியும் எனவும் இதனால் அரசாங்கம் எதிர்பார்க்கும் முறைமை மாற்றம் (System Change) மிக விரைவாக எட்டப்படும் எனவும் ஜனாதிபதி நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்ற வரவு - செலவுத் திட்ட அலுவலகத்துக்கான சட்டமூலத்துக்கும் அமைச்சரவை அங்கீகாரம் கிடைத்துள்ளதுடன், கட்சித் தலைவர்களுடன் கலந்தாலோசித்து, சட்டமா அதிபரின் அனுமதியைப் பெற்ற பின்னர் அதனை நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்க உத்தேசித்துள்ளார் என சுட்டிக்காட்டியுள்ள ஜனாதிபதி, இது தொடர்பில் விசேட கவனம் செலுத்துமாறு சபாநாயகருக்கு அறிவித்துள்ளார்.

## வடக்கு - கிழக்கு பல்கலை ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இதன் பொழுது இரு ஒன்றியங்களுக்குமிடையிலான எதிர்காலதிட்டமிடல்கள், தமிழ் தேசிய பரப்பினுள் மாணவர் ஒன்றியங்களாக ஆற்ற வேண்டிய செயற்திட்டங்கள் என ஆக்கபூர்வமான விடயங்கள் கலந்துரையாடப்பட்டன.

## வந்துள்ள மசகு ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பெற்றோலிய பொது ஊழியர் சங்கத்தின் தலைவர் கலாநிதி அசோக ரன்வல தெரிவித்துள்ளார்.

இந்தக் கப்பலுக்கான தாமதக் கட்டணமாக பெரும் தொகையை செலுத்த வேண்டியுள்ளதாக அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

டொலர்களை வீணடிக்க வேண்டாம் எனவும் நம் நாட்டில் டொலர்கள் இல்லாத நிலையில், தாமதக் கட்டணம் செலுத்தி கப்பலை நங்கூரமிடத் தேவையில்லை என அவர் தெரிவித்துள்ளார்.

இந்தக்கப்பலின்மசகுஎண்ணையின் தரத்தில் பிரச்சினை இருப்பதாவும் இது தொடர்பாக அதிகாரிகள் முடிவு எடுக்க வேண்டும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

## இம்ரான்கானின் மீது ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

காயமடைந்துள்ளார். எனினும் அவர் ஸ்திரமான நிலையில் உள்ளார் எனவும் அவரின் உதவியாளர் ரவூப் ஹசன் தெரிவித்துள்ளார்

வஸீராபாத் நகரில் நேற்று அரசியல் பேரணியொன்றில் கலந்துகொண்ட போது இம்ரான் கான் மீது துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்டுள்ளது.

பாகிஸ்தான் அரசாங்கத்துக்கு எதிராக, லாகூரிலிருந்து தலைநகர் இஸ்லாமாபாத் வரையான நீண்ட அணிவகுப்பு எனும் அரசியல் பேரணியை இம்ரான் கானின் பி.ரி.ஐ. கட்சி நடத்தி வருகிறது

இப்பேரணியின்போதே வஸீராபாத் நகரில் துப்பாக்கிச்சூடு நடத்தப்பட்டுள்ளது.

பி.ரி.ஐ. கட்சியின் பிரமுகர்களான பைசல் ஜாவித், அஹ்மெத் சட்டா ஆகியோரும் இச்சம்பவத்தில் காயமடைந்தனர் என அறிவிக்கப்பட்டுள்ளது.

(12ஆம் பக்கம் பார்க்க)




# இன்னும் மூன்று நாட்களில் பதிவுகள் நிறைவடைகின்றன

# அமெரிக்க லொத்தர் விசா

நீங்களும் அமெரிக்காவில் குடும்பத்துடன் வாழலாம்...

ஒரு உறுதியான முடிவு உங்கள் வாழ்க்கையை மாற்றிவிடும்!






நீங்கள் கூட அதிஸ்டசாலியாகலாம்

ஆச்சரியம்! ஆனால் உண்மை.

18 வயதிற்க்கு மேற்பட்ட யாரும் விண்ணப்பிக்கலாம்

அனைவருக்குமான இலவச சந்தர்ப்பம்

திருமணமானவர்களுக்கு ஒரே நேரத்தில் இரண்டு வாய்ப்புக்கள்

இலவசமாக குடும்பத்துடன் நிரந்தரமாக அமெரிக்காவில் குடியேற ஓர் அரிய சந்தர்ப்பம்

படித்தவர்கள், பட்டதாரிகள், அரச வேலை செய்பவர்கள், தனியார் துறையில் வேலை செய்பவர்கள், வேலையில்லா பட்டதாரிகள், A/L பரீட்சை எடுக்கும் மாணவர்கள், வெளிநாட்டில் படிக்க விரும்பும் மாணவர்கள் அனைவருக்கும் இது அரிய இறுதி சந்தர்ப்பமாகும். பயன்படுத்துங்கள்! பலன் பெறுங்கள்!

அலுவலர்களின் நன்மை கருதி சனி, ஞாயிறு உட்பட இரவு 7 மணிவரை பதிவுகள் மேற்கொள்ளப்படும்

மிக மிக அரிய சந்தர்ப்பம் தவறவே விடாதீர்கள்

அலட்சியம் வேண்டாம்

கடந்த காலங்களில் வாய்ப்புக்களை தவறவிட்டு விண்ணப்பிக்காதவர்கள் அப்படியே இருக்க நம்பிக்கையுடன் எம்மூடாக விண்ணப்பித்தவர்கள் வீசா பெற்று அமெரிக்கா சென்றுவிட்டார்கள்.

240 இதுவரை எம்மூடாக விண்ணப்பித்தவர்களுள் பேருக்கு மேல் அமெரிக்காவில் வாழ்கின்றார்கள்.

இளைஞர்களே, யுவதிகளே வெளிநாடு செல்ல காசில்லையா?

இலட்சக்கணக்கான காசை கொடுத்து ஏமாறுவதற்கு பதில் இலவசமாக கிடைக்கும் 55'000 பேருக்கான அதிஸ்ட வாய்ப்பை தவறவிடுவானேன்?

உங்களுக்கு விசா கிடைத்தால் உங்களுடன் சேர்த்து உங்கள் (காதலன்/காதலி) எதிர்கால வாழ்க்கைத்துணையையும் அழைத்துச்செல்லலாம்

Love You

0768226244

0768226240

நீங்கள் தவறவிடும் ஒவ்வொரு கணமும் இன்னொருவருக்கான விசா வாய்ப்பாக அமையும்

பதிவுகளுக்கு Passport தேவையில்லை

முக்கிய அறிவித்தல்

ஒருவிதத்தில் நாம் அனைவரும் அதிஷ்டசாலிகள்தான் கடந்த வருடங்களில் கட்டாயமாக்கப்பட்ட பாஸ்போட் நடைமுறை இந்த வருடம் தளர்த்தப்பட்டுள்ளது.இதன்மூலம் இலங்கையில் உள்ள மக்கள் அனைவரும் பாஸ்போட் இல்லாமலேயே விசா வாய்ப்பினை பெற்றுக்கொள்ளலாம்.

கடைசி 7 நாட்களும் உலகம் முழுவதிலுமிருந்து அதிக விண்ணப்பங்கள் போடப்படுவதால் அமெரிக்க லொத்தர் இணையமானது அடிக்கடி முடங்குவதால் இறுதிக்கட்ட ஏமாற்றங்களை தவிர்க்க, முடிந்தளவுக்கு முன்னரே பதியுங்கள்.

விண்ணப்ப முடிவு திகதி - 08-11-2022

EMERGENCY ALERT சிந்தியுங்கள்!!! உடனடியாக பதிவுசெய்யுங்கள்!

பதிவுகள் நடைபெறும் எமது கிளைகள்-விபரங்களுக்கு அழையுங்கள்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| யாழ்ப்பாணம் | -0777068777 | திருகோணமலை | - 0768226237 | கிளிநொச்சி | -0768226240 |
| நெல்லியடி | -0776699892 | கொடிகாமம் | - 0764550675 | சாவகச்சேரி | -0768226242 |
| புதுக்குடியிருப்பு | -0764550673 | சுன்னாகம் | - 0764550670 | மானிப்பாய் | -0768226238 |
| கோப்பாய் - | -0768226238 | புத்தூர் | - 0764550671 | பருத்தித்துறை | -0768226230 |
| வல்வெட்டித்துறை | -0776697960 | பண்டத்தரிப்பு | - 0777718322 | சங்கானை | -0777726322 |

கொழும்பு (வெள்ளவத்தை) - 0777469777

வெளிமாவட்டங்கள்- 0768226236

காலைக்கதிர் Kalaikkathir

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை
ஆசிரியபீடம்: இல.551 A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

## ஜனாதிபதியின் அதிருப்தி

**'சட்டியைப் பார்த்து பானை கறுப்பு என்றதாம்.'**

**அந்த மாதிரி இருக்கின்றது, நாடாளுமன்றத்தின் வேகம் போதாது, அது மெத்தனமாகச் செயல்படுகின்றது என்று அதிருப்தியும் விசனமும் தெரிவித்து, ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்த்தனவுக்கு எழுதிய கடிதம்.**

**ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் கீழ்தான் இன்று முழு அமைச்சரவையும் உள்ளது. அவர் விரும்பி நியமித்த அமைச்சர்கள்தான் அமைச்சரவையில் உள்ளனர்.**

**அமைச்சரவைத் தீர்மானம் மூலமே நாடாளுமன்றத்தைத் தாம் எதிர் பார்க்கும் வேகத்தில் ஜனாதிபதியினால் இயக்க வைக்க முடியும்.**

**அதுமட்டுமல்ல, அவரே எச்சமயத்திலும் நாடாளுமன்றுக்குச் செல்ல முடியும், அமைச்சுக்களைத் தம்வசம் வைத்திருப்பவர் என்ற அடிப்படையில், நாடாளுமன்றத்தில் அவர் கருத்தும் கூறவும் முடியும். நாடாளுமன்ற அமர்வுகளின் போது பிரசன்னமாகி பல தடவைகள் அவர் உரையாற்றியும் இருக்கின்றார்.**

**தாம் இப்போது குறிப்பிடும் விடயங்கள் தொடர்பில் உரிய காலத்தில் நடவடிக்கைகள் எடுக்கப்படவில்லை என்றால், அவரே நேரில் நாடாளுமன்றத்தில் பிரசன்னமாகி இருந்து, நாடாளுமன்றுக்கு அதைச் சுட்டிக்காட்டி, அதற்கான ஆதரவையும் சபையில் பெற்று, உரிய நடவடிக்கைகளை எடுக்க சபையில் இருந்தபடியே சபாநாயகருக்குப் பொறுப்பையும் ஒப்படைத்திருக்க முடியும்.**

**மிகுந்த நெருக்கடி சமயத்தில்தான் ரணில் விக்கிரமசிங்க ஜனாதிபதி பதவியைப் பொறுப்பேற்றார். உடனடியாக தற்காலிக அமைச்சரவை ஒன்றை அமைக்கிறார் என்று அவர் குறிப்பிட்டார். முழு செயலூக்கமுள்ள அமைச்சரவை விரைவில் அமைக்கப்படும் என்றார்.**

**இப்போது அவர் பதவியேற்று மூன்றரை மாதங்கள் (100 நாள்கள்) கடந்து விட்டன.**

**இன்னமுமே அவர் கூறிய நிரந்தர, நிலையான அமைச்சரவையை அவரால் நிறுவ முடியவில்லை. ஆரம்பத்தில் அமைத்த தற்காலிக – ஒட்டுப் போட்ட – அமைச்சரவையுடனேயே இன்றும் அரசைக் கொண்டு நடத்தும் நிலைமை அவருக்கு.**

**தமது அரசின் நிரந்தர அமைச்சரவையையே இன்னும் அமைக்க முடியாதவர், நாட்டின் நீண்ட கால முறைமை மாற்றங்களைச் செய்யப் போகின்றாராம். அதைச் செய்வதற்கு நாடாளுமன்றமும் சபாநாயகரும் வேகமாகச் செயல்படவில்லை, மெத்தனப் போக்கில் உள்ளனர் என்று அவர் குறை கூறுகின்றார். தமது நிரந்தர அமைச்சரவையையே அமைக்க இய லாமல் இழுபறிப்படுபவர், ஆட்சி முறைமைகளில் பாரிய மாற்றங்களைச் செய்யப் போகின்றாராம். மறுபக்கத்தில் அதை நாடாளுமன்றம் இழுத்தடிக் கின்றது என்கிறார்.**

**இந்த இரண்டையும் நோக்கும் போது, இரண்டு பேச்சு மொழிகள்தான் நினைவுக்கு வருகின்றன.**

**ஒன்று – 'கூரையேறி கோழி பிடிக்க முடியாதவர், வானம் ஏறி வைகுண்டம் போவது பற்றி பேசுகின்றார்'.**

**அடுத்தது – 'தானே கறுத்துப் போன பானை, சட்டியைப் பார்த்துக் கறுப்பு' – என்றதாம்.**

**இதுதான் நமது ஜனாதிபதியின் ஆட்சியின் சீத்துவம்.**

# பதவியை இராஜினாமாச் செய்துவிட்டு கருவின் அமைப்பில் இணையவிருப்பம்

### ஹரின் பெர்னாண்டோ இப்படிக் கூறுகிறார்



பதவிகளை இராஜினாமாச் செய்துவிட்டு முன்னாள் சபாநாயகர் கருஜெயசூரிய தலைமையிலான சமூக இயக்கத்தில் இணைந்துகொள்கின்றமை தொடர்பாக சிந்தித்து வருகிறேன் என அமைச்சர் ஹரின் பெர்ணாண்டோ தெரிவித்துள்ளார்.

ஓகஸ்ட் மாதத்துக்குள் நாட்டின் தற்போதைய நெருக்கடிகள் முடிவிற்கு வந்தால் அமைச்சு பதவியை இராஜினாமா செய்துவிட்டு சமூக நீதிக்கான தேசிய இயக்கத்தில் இணைந்துகொள்ளப்போகிறேன் என அவர் தெரிவித்துள்ளார்.

கருஜெயசூரிய விக்டர் ஐவனின் சமூக நீதிக்கான தேசிய இயக்கம் சிறந்த ஒரு விடயத்துக்காக குரல்கொடுக்கின்றது என நான் கருதுகின்றேன். அவர்கள் சமீபத்தில் தங்கள் திட்டங்களை எங்கள் முன் தெளிவுபடுத்தினார்கள். முன்னோக்கி செல்வதற்கு அதுவே சிறந்த வழி எனக் கருதுகின்றேன் என ஹரின் பெர்ணான்டோ தெரிவித்துள்ளார்.

நான் எனது அரசியல் வாழ்க்கையிலிருந்து வெளியேறி அதில் இணைய விரும்புகின்றேன் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இலங்கை அரசியலின் முழு கருத்தும் பிழையானது அது இனம் மதம் என பிளவுபட்டுள்ளது என குறிப்பிட்டுள்ளதுடன் நாங்கள் பிளவுபட்டிருக்கின்றோம் எனவும் குறிப்பிட்டுள்ளார்.

எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ சுயநலம் மிக்கவராகக் காணப்படுகின்றார். ஜனாதிபதியாக பதவியேற்பது தொடர்பாக உறுதியாகவுள்ளார் என ஹரின் பெர்ணாண்டோ சாடியுள்ளார்.

இது சுலபமில்லை. நாங்கள் எதிர்கொண்ட பிரச்சினைக்கு காரணமான நபரின் முகத் தை மாத்திரம் நீங்கள் மாற்றுகின்றீர்கள் எனத் தெரிவித்துள்ள ஹரின்பெர்ணாண் டோ, சஜித் பிரேமதாஸ இன்னுமொரு குழப்ப மாக மாறுவார். அமைப்புமுறையை மாற்றுவதேஅவசியம்எனவும்தெரிவித்துள்ளார்.

# தேசத்துரோகி யார்? தேசபிமானி யார்? என்பதை மக்கள் அறிவார்களாம்!

### சரத் பொன்சேகா சுட்டிக்காட்டு



நாட்டைச் சீரழித்த அரச தலைவர்கள் உட்பட அரசியல்வாதிகள் அரசியலில் இருந்து முழுமையாக விலகும் வரை மக்கள் போராட்டம் தொடரும்.

யார் தேசதுரோகி? யார் தேசபிமானி? என்பதை நாட்டு மக்கள் நன்கு அறிவார்கள் என நாடாளுமன்ற உறுப்பினர் பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா தெரிவித்தார்.

அரசாங்கத்திற்கு எதிராக புதன்கிழமை இடம்பெற்ற போராட்டத்தை களனியில் ஆரம்பித்து வைத்ததன் பின்னர் ஊடகங்களுக்குக் கருத்துரைக்கையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் குறிப்பிட்டவை வருமாறு –

போராட்டத்தில் கலந்து கொள்பவர்களின் எண்ணிக்கையைக் கொண்டு மக்கள் போராட்டத்தைக் கணிப்பிட முடியாது. மக்கள் போராட்டம் சற்று தணிவடைந்துள்ளதே தவிர முடிவடையவில்லை என்பதை அரசாங்கம் விளங்கிக் கொள்ள வேண்டும்.

நாட்டை சீரழித்த அரச தலைவர்கள் உட்பட அரசியல்வாதிகள் அரசியலில் இருந்து முழுமையாக விலகும் வரை மக்கள் போராட்டம் தொடரும்.

யுத்தத்தின் போது ஒரு கட்டத்தில் போராட்டம் தீவிரமடையும்,ஒரு கட்டத்தில் போராட்டம் தளர்வடையும் அதற்காக போராட்டம் முடிவடைந்து விட்டது எனக் குறிப்பிட முடியாது. அதுபோல தான் தற்போதும் மக்கள் போராட்டம் காணப்படுகிறது.

குறுகிய அரசியல் நோக்கத்துக்காக கட்சியையும், அடிப்படை கொள்கைகளையும் அடிக்கடி மாற்றிக் கொள்பவர்கள் போராட்டத்தில் ஈடுபடுபவர்களைத் தேசத்துரோகிகள் என்று குறிப்பிடுகின்றமை வேடிக்கையாக உள்ளது. யார் தேசதுரோகி? யார் தேசபிமானி? என்பதை நாட்டு மக்கள் நன்கு அறிவார்கள்.

போராட்டத்தில் ஈடுபடும் உரிமை நாட்டு மக்களுக்கு உண்டு. ஜனநாயகத்தை முன்னிலைப்படுத்தி அரசாங்கம் செயற்படுமாயின் மக்களின் அபிலாஷைக்கு மதிப்பளித்து தேர்தலை நடத்த வேண்டும். தேர்தல் ஒன்று இடம்பெற்றால் நாட்டு மக்கள் தகுந்த பதிலடி கொடுப்பார்கள். – என்றார்.

# பாலியல் துன்புறுத்தல் குற்றச்சாட்டு; நாமல் குமார அதிரடியாகக் கைது!

ஊழலிற்கு எதிரான முன்னணியின் இயக்குநர் நாமல்குமார, பெண்ணொருவரை பாலியல் ரீதியில் துன்புறுத்திய குற்றச்சாட்டின் கீழ் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

வரக்காலபொல பொலிஸாரிடம் பெண்ணொருவர் செய்த முறைப்பாட்டின் அடிப்படையில் இவர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

நாமல்குமார தனது வீட்டில் வைத்து தன்னை பாலியல் வன்முறைக்கு உட்படுத்தியுள்ளார் என அந்தப்பெண் முறைப்பாடு செய்துள்ளார். அவரை தான் வீட்டிலிருந்து இழுத்து வந்து மரத்தில் கட்டி தாக்கினேன் என அந்த பெண் தெரிவித்துள்ளார்.

நாமல்குமார கதிரையில் கட்டப்பட்டிருக்கும் படங்கள் சமூகஊடகங்களில் வெளியாகியுள்ளமை குறிப்பிடத்தக்கது.



# பௌத்த உறவுகளை மேம்படுத்த ஒரு கோடியே 50 லட்சம் டொலர்!

## இந்தியாவுடன் பேச்சு

கொழும்பு, நவ. 04

ஒரு கோடியே 50 லட்சம் டொலர் இந்திய கடனுதவியின் கீழ் பௌத்த உறவுகளை மேம்படுத்துதல் உள்ளிட்ட திட்டங்களை விரைவுபடுத்த இலங்கையும் இந்தியாவும் இணங்கியுள்ளன.

இந்த விடயம் தொடர்பாக இந்திய உயர்ஸ்தானிகர் மற்றும் அமைச்சர் விதுர விக்கிரமநாயக்க ஆகியோர் கலந்துரையாடினர் என இந்திய உயர்ஸ்தானிகராலயம் தெரிவித்துள்ளது.

பௌத்த உறவுகளை மேம்படுத்துதல் மற்றும் யாழ்.கலாசார நிலையத்தின் செயற்பாடு உள்ளிட்ட முன்னுரிமைத் திட்டங்கள் தொடர்பாக இதன்போது பேசப்பட்டுள்ளது.

இந்த நிதியில் இருந்து நாடு முழுவதும் உள்ள துறவிகளைப் பயிற்றுவிக்கும் வழிபாட்டுத் தலங்கள் மற்றும் பிரிவெனாக்களில் சூரிய சக்தி வசதிகளை நிறுவுவது பற்றியும் விவாதிக்கப்பட்டது.

இந்த நிதியுதவி இந்தியாவின் உறுதிப்பாட்டை அடிக்கோடிட்டுக் காட்டுவதாகவும் இந்திய உயர்ஸ்தானிகராலயம் வெளியிட்ட அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

# தீர்வையில்லா வணிக நிலையம் கொழும்பு துறைமுக நகரத்தில்!

கொழும்பு துறைமுக நகரத்தில் தீர்வையில்லா வணிக நிலையம் ஏப்ரல் மாதம் திறக்கப்படவுள்ளது.

உலகின் முன்னணி நிறுவனங்கள் மூன்று இதில் உள்ளடங்குவதுடன், இது தெற்காசியப் பிராந்தியத்தில் உள்ள மிகப்பெரிய தீர்வையில்லா வணிக நிலையம் எனக் கூறப்படுகிறது.

இலங்கைக்கு பொருள்களை இறக்குமதி செய்வதற்கு தடை விதிக்கப்பட்டுள்ள போதிலும் இதனால் வணிக வளாகம் பாதிக்கப்படாது என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் இது வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளை ஈர்க்கும் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது.

# மட்டக்களப்பில் கடந்த மாதம் மாத்திரம் 700 மாடுகள் நோயினால் இறந்துள்ளன!

மட்டக்களப்பு மாவட்டத்தில் கடந்த ஒரு மாதத்தில் மட்டும் நோயால் 700 இற்கும் அதிகமான மாடுகள் இறந்துள்ளன எனக் கால்நடை பண்ணையாளர்கள் தெரிவிக்கின்றனர்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் கால்நடைகள் இறப்பது தொடர்பாக மட்டக்களப்பு மாவட்ட செயலகத்துக்கு வருகை தந்து மாவட்ட உதவி அரசாங்க அதிபருடன் கலந்துரையாடல் முன்னெடுக்கப்பட்டது.

மட்டக்களப்பு சர்வமத பேரவை மற்றும் மயிலத்தமடு, மாதவனை கால்நடை வளர்ப்பு கமநல அமைப்பு ஆகிய அமைப்புகள் இணைந்து இந்த சந்திப்பை மேற்கொண்டன.

மட்டக்களப்பு மாவட்ட உதவி அரசாங்க அதிபர் நவேஸ்வரனை சந்தித்த குழுவினர் அண்மைக்காலமாக கிரான் மற்றும் செங்கலடி பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட பகுதிகளில் மாடுகள் திடீர்திடீர் என இறக்கின்றமை தொடர்பாக இதன்போது கலந்துரையாடப்பட்டது.

மயிலத்தமடு, மாதவனை கால்நடை வளர்ப்பு கமநல அமைப்பின் தலைவர் எஸ்.நிமலன், மட்டக்களப்பு சர்வமத பேரவை தலைவர் த.மனோகரன் உட்பட கால்நடை பண்ணையாளர்கள், சர்வமத பேரவையின் உறுப்பினர்கள் எனப் பலர் கலந்துகொண்டனர்.

அத்துடன் இவ்வாறு கால்நடைகள் உயிரிழக்கும்போது அரச கால்நடை வைத்திய அதிகாரி அலுவலகம் முறையான நடவடிக்கைகளை முன்னெடுக்கவில்லையென பண்ணையாளர்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

கடந்த 09 தினங்களுக்குள் 200 மாடுகள் உயிரிழந்துள்ளன எனவும் ஏற்கனவே இதற்கான தடுப்பூசிகள் வழங்கப்பட்டிருந்தால் மாடுகள் இறப்பதைத் தவிர்த்திருக்கமுடியும் எனவும் மயிலத்தமடு,மாதவனை கால்நடை வளர்ப்பு கமநல அமைப்பின் தலைவர் எஸ்.நிமலன் தெரிவித்தார்.

அரச கால்நடை வைத்திய அதிகாரி அலுவலகம் இது தொடர்பில் உடல்கூறுகளைப்பெற்றுச்சென்று ஒன்பது தினங்களை கடந்துள்ள நிலையிலும் இதுவரையில் அது தொடர்பில் முறையான நடவடிக்கையெடுக்கவில்லையெனவும் மாடுகளுக்கு தொண்டையடைப்பான நோய் என மருந்துவழங்குவதாகவும் இதனை முன்பே செய்திருந்தால் 700 மாடுகளின் இறப்பைத் தடுத்திருக்கமுடியும் எனவும் கால்நடை பண்ணையாளர்கள் தெரிவிக்கின்றனர்.

அரச கால்நடை வைத்திய அதிகாரி அலுவலகத்தால் சில மருந்துகள் தனியார் நிலையங்களில் கொள்வனவு செய்யுமாறு பணிக்கப்பட்ட நிலையில் அதிக விலைகள் கொடுத்து அந்த மருந்துகளை பெற்று மாடுகளுக்கு வழங்கியபோதும் அவை பலனளிக்கவில்லையெனவும் பண்ணையாளர்கள் தெரிவித்தனர்.

வீடுகளில் வளர்க்கப்படும் மாடுகளுக்கு மட்டுமே காப்புறுதி செய்யப்படுவதாகவும் மேய்ச்சல் தரைகளில் வளர்க்கப்படும் கால்நடைகளுக்கு காப்புறுதி செய்யப்படாத காரணத்தால் இழப்பீடுகளைப் பெற்றுக்கொள்ள முடியாத நிலை காணப்படுவதாகவும் கால் நடை பண்ணையாளர்கள் தெரிவிக்கின்றனர்.

அரச கால்நடை வைத்திய அதிகாரி அலுவலகத்தின் ஊடாக கால்நடைக்கான மருந்துகளைப் பெற்றுக்கொள்வதற்கு அரசாங்கம் நடவடிக்கையெடுக்கவேண்டும் என்பதுடன் உயிரிழந்த மாடுகளுக்கான நஷ்டஈடுகளைப்பெற்றுத்தர நடடிக்கையெடுக்கவேண்டும் எனவும் கோரிக்கை விடுத்தனர்.

ஒரு மாடு சுமார் ஒன்றரை லட்சம் ரூபாவுக்கு மேல் பெறுமதியானதாகவும் சுமார் 700 மாடுகள் இறந்த காரணத்தால் கால்நடை வளர்ப்பாளர்கள் பாரிய நஷ்டத்தினை எதிர்கொண்டுள்ளனர் எனவும் அவர் தெரிவித்தனர்.

இது தொடர்பிலான மகஜர் ஒன்றும் மட்டக்களப்பு மாவட்ட உதவி அரசாங்க அதிபர் நவேஸ்வரனிடம் கையளிக்கப்பட்டது.



# கட்சி அரசியலுக்கும் அப்பால் சென்று மலையகக்கட்சிகள் ஒன்றுபடவேண்டும்!

## ஜீவன் தொண்டமான் வலியுறுத்து



மலையகக் கட்சிகள் எமது மக்களின் நலனுக்காக அரசியலுக்கு அப்பால் ஒன்றுபட வேண்டியது அவசியம் என இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் பொது செயலாளரும், நுவரெலியா மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான ஜீவன் தொண்டமான் தெரிவித்துள்ளார்.

அவர் வெளியிட்டுள்ள அறிக்கையிலேயே இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு –

தமிழ் முற்போக்குக் கூட்டணியின் தலைமையக திறப்புவிழாவில் பங்கேற்குமாறு மலையக அரசியல் கட்சிகளும், தோட்டத் தொழிலாளர் தொழிற்சங்கங்களும் மனமுவந்து எனக்கு அழைப்பு விடுத்தன. அதன் காரணமாக அந்த நிகழ்வில் நான் பங்கேற்றேன்.

மக்களின் நலன் சார்ந்த விடயங்களில் அரசியல் வேறுபாடுகளுக்கு அப்பால் மலையகத்தின் ஏனைய அரசியல் தரப்புகளுடன் புரிந்துணர்வுடனும், நல்லெண்ணத்துடனும் செயற்படுவதற்கு நான் தயாராக உள்ளேன்.

அழைப்பு விடுத்தால் அதனை ஏற்றுக்கொண்டு செல்வதுதான் நாகரிகம். நாம் அனைவரும் ஒரு தாயின் பிள்ளைகள் என்ற உணர்வு எமக்குள் இருக்க வேண்டும். நான் மேற்படி நிகழ்வில் பங்கேற்றமை தொடர்பில் பலருக்கு பலவித வேறுபட்ட உணர்வுகள் இருக்கலாம். ஆனால் எமது சமூகத்தை முன்னேற்றுவதற்கு ஒன்றிணைந்த வேலைத்திட்டம் அவசியம் என்பதை நாம் மறக்கலாகாது. அதற்கான ஆரம்பமே இதுவாகும்.

நான் அரசியல் களத்தில் பயணிக்க ஆரம்பித்த காலம்தொட்டு எத்துறையைச் சார்ந்த அரசியல், தொழிற்சங்கம், பல்துறையைச் சார்ந்தவர்களுக்கு மதிப்பளித்து அவர்களுடைய அனுபவங்களையும், துறைசார்ந்த நிபுணத்துவத்தையும் மதிப்பளித்து நடந்துக்கொள்வதுதான் அணுகுமுறையாகப் பார்க்கின்றேன். அந்தவகையில் எதிர்காலத்திலும் இவ்வாறான மூத்த அனுபவமிக்கவர்களுடன் கைகோர்த்து பயணிப்பதே எனது இலக்காகும்.

வெறுப்பையும் எதிர்ப்பையும் வைத்து இனிமேலும் அரசியல் செய்ய முடியாது. அவ்வாறான அரசியல் பிளவு கொண்ட அரசியல் போக்கில் நாம் நீடித்துச் செல்ல முடியாது என்பது எனது குறுகிய கால அரசியல் வாழ்வில் நான் கற்றுக்கொண்ட அனுபவம் ஆகும். அன்பினாலும் நல்லிணக்கப்பாட்டினாலுமே எமது மக்களுக்கான நன்மைகள் சாத்தியப்படும்.

அன்றைய சந்திப்பின் போது மலையக அரசியல் கட்சிகளுக்கிடையே அரசியல் ரீதியாக ஒற்றுமை இல்லாவிட்டாலும் அந்தக் கட்சிகள் அனைத்தும் புரிந்துணர்வோடு செயற்படுவதற்கு இணக்கம் தெரிவித்துள்ளன. அவ்வாறே இ.தொ.காவின் பொதுச்செயலாளர் என்ற ரீதியில் மலையக மக்களின் நலன் சார்ந்த எல்லா விடயங்களிலும் இணக்கப்பாட்டுடன் பயணிக்க நான் தயாராகவுள்ளேன்.

அதேபோன்று மலையக அரசியல் கட்சிகளுக்கிடையே கருத்து வேறுபாடுகள் தோன்றும் பட்சத்தில், நாம் முட்டிமோதிக் கொள்ளாமல் ஆரோக்கியமான முறையில் எங்கள் வழியில் பயணிப்போம்.

அத்தோடு நான் தமிழ் முற்போக்குக் கூட்டணியின் தலைமைக் காரியாலய திறப்பு விழா நிகழ்வில் கலந்துக்கொண்டமை கட்சி பேதமின்றி அனைத்து இளைஞர்கள் மத்தியிலும் வரவேற்பையும், நல்லிணக்கத்தையும் வெளிப்படுத்துகின்றது.

ஆகவே, இளைஞர்களாகிய நீங்கள் இந்த விடயத்தை மக்களின் எதிர்காலத்தை மனதில் கொண்டு நல்லெண்ணத்துடன் எமது மக்கள் மத்தியில் கொண்டு செல்வீர்கள் என நம்புகின்றேன். – எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

## கத்தி முனையில் அச்சுவேலி பகுதியில் 3 பெண்களிடம் வழிப்பறிக் கொள்ளை!

யாழ்ப்பாணம் – அச்சுவேலி பகுதியில் மூன்று பெண்களிடம் வழிப்பறி கொள்ளையர்கள் கத்தி முனையில் நகைகளைக் கொள்ளையடித்துச் சென்றுள்ளனர்.

அச்சுவேலி வைத்தியசாலை வீதியில் நடந்து சென்ற மூன்று பெண்களிடம் மோட்டார் சைக்கிளில் வந்த இருவர் விலாசம் கேட்பது போன்று பாசாங்கு செய்து , திடீரென கத்தியைக் காட்டி மிரட்டி நகைகளைக் கொள்ளையடித்து தப்பி சென்றுள்ளனர்.

அதன் போது பெண்ணொருவரின் தோட்டைக் கழட்டும் போது , அது கழறாததால் பெண்ணின் காதில் இருந்து தோட்டை பிடுங்கி எடுத்துள்ளனர். அதனால் அந்தப் பெண்ணின் காதில் காயம் ஏற்பட்ட நிலையில் அச்சுவேலி வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றுள்ளார்.

இதேவேளை கொள்ளையடித்து செல்லப்பட்ட நகைகளில் ஒரு நகை கவரிங் எனவும் தெரிவிக்கப்பட்டது.

சம்பவம் தொடர்பில் அச்சுவேலி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.




கிளிநொச்சியில்
ஐஸ்வர்யம்
பெருவிருந்து மண்டபம்
Ishwaryam Banquet Hall
Tel:- 021 228 3701, 071 7354308
Whatsapp:- 071 7736 4308
No.315, Kandy Road,
Kilinochchi
அன்பான வரவேற்பு
தமிழர் பாரம்பரிய உணவு வகைகள்
இந்தியன் இனிப்புப் பண்டங்கள்
இந்தியன் உணவுவகைகள்
Online booking இற்கு விசேட விலைக்கழிவாக
30% பெற்றுக்கொள்ளலாம்.
சகலவிதமான நிகழ்வுகளும் புதிதாக வடிவமைக்கப்பட்ட அனைத்து
வசதிகளுடனும் அழகான விருந்துபசார மண்டபம்
ISHWARYAM BANQUET HALL
BANQUET MEALS HALL
FULL OPTION
MAIN DIHES
Vegitable Fried Rice with
Panner & Ghee - 900/=
Chiken Fried Rice with
Vegetable - 1100/=
Kothu Rotty With Vegitable
in Indian Style
DESSERT
ice Cream Cup - 60/=
Fruit Salad - 60/=
I ce Cream & Fruit Salad - 100/=
Cream Caramel - 120/=
SPECIAL MENU PACKAGE
BEVERAGES
jUICE 200 ml - 70/=
Milk Drink - 70/=
Cocacola M - 70/=
Pepsi M - 70/=
Swchpees Tin - 250/=
Coca Cola Tin - 250/=

# தான் பிடித்த முயலுக்கு...

## அக்கரை அக்கறை அலசல்



என்.சத்தியமூர்த்தி

கொடுமை, கொடுமை என்று கோவிலுக்கு போனால், அங்கே நாலு கொடுமை கூத்தாடிக் கொண்டிருந்ததாம். தனது நாடாளுமன்ற உரையின் போது, சுமந்திரன் நீதித் துறையை அவமரியாதையாக பேசினாரா என்பது குறித்த பிரச்சினை அந்த நிலையில் தான் நிற்கிறது. ஆனால், அது குறித்த விமர்சனங்கள் மற்றும் வியாக்கியானங்களுக்கு குறைவில்லை.

தற்போதைக்கு, நீதி அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷஷ, இது குறித்து, நாடாளுமன்றத் தெரிவு குழு ஒன்று விசாரணை செய்ய வேண்டும் என்று சபாநாயகர் ம



ஹிந்த யாப்பா அபயவர்தனேயிடம் கடிதம் ஒன்றை சமர்ப்பித்துள்ளார். அவரோ, அல்லது அரசு தரப்பு உறுப்பினர் வேறு யாராவதோ, சுமந்திரனுக்கு எதிராக நீதி துறையையே அணுகாதது, பிரச்சினையை பெரிதாக்க வேண்டாம் என்ற அவர்களது உள்ள நோக்கை வெளிப்படுத்துகிறது.

அரசை பொறுத்தவரையில், நாடாளுமன்றத்தினுள்ளேயே ஆனாலும் நீதி துறை அவமதிக்கப்படுவதை தாங்கள் ஏற்றுக்கொள்ளவில்லை என்ற செய்தியை அறிவித்திடல் வேண்டும். அதே சமயம், சபையினுள் உறுப்பினர்களுக்கான உரிமைகளையும், நீதிதுறையிடம் சரண்டர் செய்துவிடக்கூடாது. அவ்வாறு குற்றம்சாட்டப்பட கூடாது. அவ்வாறு செய்ததாக ஒரு தோற்றத்தையும் உருவாக்கிவிடக் கூடாது. அதற்கு தெரிவு குழு கோருவதே சிறந்த வழி.

### விசனம், விமர்சனம்

சுமந்திரனின் நாடாளுமன்ற உரையின் சாராம்சம் இதுதான். கடந்த காலத்தில், அரசியல் யாப்பின் 19 ஆவது திருத்த மசோதா மீது தனது அறிவுறுத்தலை அளித்த உச்ச நீதிமன்றம் அவற்றையே மாற்றி தற்போது 22 ஆவது திருத்த மசோதாவிற்கு அளித்துள்ளது. அது ஒரு விதத்தில் உண்மையும் கூட. ஆனால், அதனை ஒட்டி, நீதி துறை மீதான சுமந்திரனின் விசனம் மற்றும் அது சார்ந்த விமர்சனம் அதிகப்படியாக போய்விட்டதா, என்பதே கேள்வி.

இதில் சில கேள்விகள் எழுகின்றன. நீதி துறை, அதிலும் குறிப்பாக அரசியல் யாப்பு போன்ற விடயங்களில், தான் பிடித்த முயலுக்கு மூன்றே கால் என்று தான் இருக்க வேண்டுமா? அல்லது. சமகால அரசியல் சூழலுக்கு அடிபணியாமல், அதே சமயம், சமுதாய மனப்பாங்கு மற்றும் மாற்றங்களை உள்வாங்கும் திறனுடன் நீதி துறை செயலாற்ற வேண்டுமா?

அவ்வாறு, மனித குலம், பல்வேறு மாற்றங்களையும் பல்வேறு காலகட்டங்களில் உள்வாங்கி இருந்திராவிட்டால், நாம் இன்னமும் நமது முன்னோர்கள் போல, குகைகளில் வாழ்ந்து கொண்டிருந்திருப்போம். இது போன்ற, அறிவுபூர்வமான ஒரு சர்ச்சைக்கு இடமோ, அவசியமோ இருந்திருக்காது.

பிற நாடுகளில், அதிலும் குறிப்பாக ஜனநாயக நாடுகளில் அரசும், நாடாளுமன்றம் நீதி துறையும் சமூகத்தின் வளர்ச்சிக்கு ஈடு கொடுத்தே செயல்பட்டு வருகின்றன. அவ்வாறு மாற்றங்களை உள்வாங்கும் போது, அந்த மாற்றங்களுக்குள்ளேயே வரன்முறைகளை மட்டுமே, இந்த அரசு சார்ந்த துறைகள் குறியிட்டு மக்களிடமே திரும்பி அளிக்கின்றன. அல்லது, அது தான் சாராம்சம், அவர்களிடமிருந்தான எதிர்பார்ப்பு.

உதாரணத்திற்கு சொல்லவேண்டுமானால், இன்று சுமந்திரன் போன்ற தமிழ் தலைவர்களும் மற்றும் அவரையொத்த சட்ட வல்லுனர்களும் அரசை துகிலுரிக்கும் மனித உரிமை சட்டங்கள் சில தசாப்தங்களுக்கு முன் இருக்கவே இல்லை. இலங்கை என்று மட்டுமல்ல. இரண்டாவது உலகப்போர் காலத்திற்கு பின்னரே இது போன்ற கருத்தியல்கள் உலகளவில் உருவாகின.

### மாறாத மாற்றம்

தற்போது, உலகளவிலும் சுற்று – சூழல் குறித்த தனி மனித கவலைகள், சர்வதேச ஒப்பந்தங்களாக உருவெடுத்து, பல்வேறு நாடுகளின் அரசும், நாடாளுமன்றமும், நீதி துறையும் அவற்றிற்கு செயல்வடிவம் கொடுத்து வருகின்றன. மெருகூட்டி வருகின்றன.

எனவே, மாற்றம் ஒன்றே மாறாத மாற்றம், அல்லது நிலையானது, என்பதை சுமந்திரன் போன்றோரும் ஏற்றுக்கொள்ள வேண்டும். அதே சமயம், மாறிவரும் சமூக சூழல்கள் மற்றும் சமூக ஊடகங்களின் தாக்கம் ஆகியவற்றை மனதில் கொண்டு, நீதி துறையும், தங்களது மன மாற்றத்திற்கான காரணங்களை மக்களிடம் தெளிவுபடு;த்த வேண்டிய காலகட்டத்தில் இருக்கிறோம்.

அந்த வகையில், அரசியல் யாப்பு மாற்றம் குறித்த தனது அறிவுறுத்தல்களுக்கான காரண – காரியங்களையும்



உச்ச நீதிமன்றம் சபாநாயகர் மூலம் நாடாளுமன்றத்திடமும், அதன் மூலம் மக்களிடமும் தெளிவு படுத்துவது அவசியமாகிறது. அவ்வாறில்லாமல், தங்களது அறிவுறுத்தலை மட்டுமே, உச்ச நீதிமன்றம் தொடர்ந்து அளித்து வருமேயானால், இது போன்ற தவிர்க்க கூடிய பிரச்சினைகளும் தவிர்க்க முடியாமல் போய்விடும் அபாயம் உள்ளது.

அரசியல் தரப்புகளும், தலைமைகளும் தங்களது நியாயங்களையும், நிலைபாடுகளையும் தெளிவு படுத்தாமலே மக்களை முட்டாள்கள் என்று மட்டுமே ஆண்டாண்டு காலமாக நினைத்து செயலாற்றி வந்ததாலேயே, அறகலயா போன்ற மக்கள் சார்ந்த போராட்டம் உருவானது. அதற்கு அனைத்து தரப்பினரின் ஆதரவும், கேட்காமலே கிடைத்தது.

### நேரடி தீர்வு

இந்த பின்னணிகளில், 19 மற்றும் 22 குறித்த சர்ச்சையில், சுமந்திரன் போன்



றோர், உச்ச நீதிமன்றத்தையே நேரடியாக அணுகி, விளக்கம் கோருவது அழகா? அல்லது, நாடாளுமன்ற உறுப்பினர்களின் சலுகைகளுக்குள் ஒளிந்து கொண்டு, தனது பேச்சின் ஆழமும், கருத்தின் வீரியமும் பதில் பெறாமலே விடப்படுவதை ஏற்றுக் கொள்வது சரியா?

நீதி துறையை விமர்சிப்பது மட்டுமே அவருடைய நோக்கமாக இருந்தால், பின்னது சரியான பாதை. மாறாக, பிரச்சினைக்கு முடிவு காண வேண்டுமென்றால், முன்னது மட்டுமே சரியான வழி. காரணம். உச்ச நீதிமன்றத்தை நாடி சட்டப்படி விளக்கம் கேட்கும் போது, அந்த வழக்கு மட்டுமே நீதிமன்ற அவமதிப்பு குற்றமாகி விடாது. என்ன, அவ்வாறு நீதிமன்றத்தை அணுக, ஒரு நியாயமான வழக்கும் அதற்கான காரணமும் வேண்டும். ஜனாதிபதி சட்டத்தரணியான சுமந்திரன் போன்ற மூத்த வழக்கறிஞர்களிடம் அது போன்ற வழக்குகள் வழமையாகவே வரும்.

அவ்வாறு செய்யாமல், நாடாளுமன்றத்தில் மட்டுமே சுமந்திரன் போன்றோர் இது போன்ற பிரச்சினைகளை கிளப்பி வந்தால், அதற்கான முடிவும் கிடைக்காது. அவர் போன்றோர் பிரச்சினைவாதிகள், விளம்பரப்பிரியர்கள் என்றெல்லாம் முத்திரை குத்தப்பட்டு, பச்சை குத்தப்பட்டு, ஓரம் கட்டப்படுவார்கள்.

அந்த வகையில். சுமந்திரன் போன்றோரின் வீரம் விலை போகாது, விவேகம் துணைக்கு வாராவிட்டால். இது ஆங்கில பழமொழியான 'Discretion is the better part of valour' என்ற பதத்திற்கு தமிழ் நாட்டில் அண்ணதுரை அளித்த மொழியாக்கம். அது தற்போதைய சூழலுக்கு பொருந்துகிறது.

### நீதிமன்ற அவமதிப்பு

இந்த பின்னணியில், நீதிமன்ற அவமதிப்பு என்ற சட்டத்தினையும் அதன் செயற்பாட்டையும் ஆராய வேண்டியிருக்கிறது. பல்வேறு ஜனநாயக நாடுகளில், நீதி துறையின் மாட்சிமைக்கு களங்கம் ஏற்படுத்தாமல், அதன் தீர்ப்புகளை நடுநிலையோடு விவாதிக்கலாம், விமர்சிக்கலாம் என்ற நிலைமை தோன்றியுள்ளது. ஆசியாவின் மூத்த தேர்தல் ஜனநாயகம் என்ற வகையில், இலங்கையிலும் இவ்வாறான நிலைமை தோன்றுவதற்கு நீதி துறையே முன்னெடுப்புகளை மேற்கொள்ளலாம்.

காரணம், தற்போது, நாட்டின் அரசியல் மற்றும் அரசு தலைமைகளின் கைகளில் சிக்கிக்கொண்டு, நீதிமன்ற அவமதிப்பு குறித்த சட்டமும் அதன் செயல்பாடும் படும் பாடு, சொல்லிமாளாது. இதற்கு, அவ்வப்போதைய ஜனாதிபதிகளும் உடந்தை என்றே கூற வேண்டும்.

கடந்த இரண்டு தசாப்தங்களில், எஸ்.பி.திஸ்நாயகே, ஞானசார தேரர் மற்றும் ராமன் ரத்னாயகே ஆகிய மூன்று அரசியல் தலைவாகளை, உச்ச நீதிமன்றம், நீதிமன்ற அவமதிப்பு குற்றத்திற்காக சிறையில் அடைத்தது. அவர்களை முறையே ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ, மைத்திரிபால சிரிசேனா மற்றும் தற்போதைய அரசு தலைவரான ரணில் விக்கிரமசிங்கே ஆகியோர், தண்டனை காலம் முடியும் முன்னரே விடுதலை செய்தனர்.

அதற்கு அவர்களுக்கு கைகொடுத்தது, அரசியல் யாப்பின் கீழ் ஜனாதிபதிக்கு சிறையில் இருப்போரை மன்னித்து விடுதலை செய்வதற்கு கொடுக்கப்பட்டுள்ள அதிகாரம் ஆகும். இந்த அதிகாரம், சில குறிப்பிட்ட சந்தர்ப்பங்களில் மட்டுமே பயன்படுத்தப்பட வேண்டியது. ஆனால், இந்த மூன்று ஜனாதிபதிகளும் சரி, இடையில் பதவியில் இருந்த கோட்டாபய ராஜபக்ஷவும் சரி, இவர்களுக்கு எல்லாம் முன்னோடியாக இருந்த அரச தலைவர்களும் சரி, தவறாக பயன்படுத்தினார்கள்.

கோட்டாபய, அப்பாவி தமிழர்களை கொன்று. தண்டனை அனுபவித்து வந்த இராணுவத்தினரை விடுதலை செய்ய இந்த அதிகாரத்தை தவறாக பயன்படுத்தினார். அதை விட, ஞானசார தேரரை சிறையிலேயே சந்தித்து அளவளாவி விட்டு. அவருக்கு ஜனாதிபதி சிறிசேனா மன்னிப்பு அளிப்பதாக அறிவித்தமை, ஜனநாயக மரபுகளில், எதில் சேர்த்தி என்று தெரியவில்லை.

ஆனால், இது போன்ற வழக்குகள் எதிலுமே, உச்சநீதிமன்றம் அரசையும் அரச தலைமையையும் கேள்வி கேட்கவில்லை. எவ்வாறு, நீதிமன்ற அவமதிப்பு குறித்து அவர்களால் சுயமாக வழக்கை முன்னெடுக்க முடிந்ததோ, அவ்வாறே, ஜனாதிபதி தங்களது தீர்ப்பை உதாசீனம் செய்வது குறித்தும் கேள்வி எழுப்பி, அதற்கான விடையை அவர்களே கொடுத்திருக்க முடியும்.

### இந்தியா, முன்னோடி

நீதி 8மன்றம் என்று மட்டும் இல்லை, மற்ற விடயங்களில் மிகவும் பரபரப்பாக செயலாற்றும் சமூக அமைப்பினரும், சட்டத்தரணிகளின் சங்கங்களும், ஏன் தனி மனிதர்களும் கூட உச்சமன்றத்தை



அணுகி இருக்கலாம். ஆனால், யாருமே இது வரை இது குறித்து கவலைப்படவில்லை என்பதே கவலைக்குரிய விடயம். என்ன, இதில் பத்திரிகை ஆசிரியர்கள் மட்டும, ஒவ்வொரு நிகழ்வையும் ஒட்டி, தலையங்களை தீட்டி தங்களது விசனங்களுக்கு வடிகால் அமைத்துக் கொண்டுள்ளார்கள். அவ்வளவு தான்.

அந்த வகையில், அண்டை நாடான இந்தியாவில், பிரதமர் இந்திரா காந்தி கொலைவழக்கில் தூக்கு தண்டனை அளிக்கப்பட்ட சத்வந்த் சிங், அன்றைய ஜனாதிபதியிடம் கருணை மனு அளித்தார். அது குறித்து விசாரித்த இந்திய உச்ச நீதிமன்றம் கருணை மனு தொடர்பாக ஜனாதிபதி தன்னிச்சையாக முடிவு எடுக்க முடியாது என்று தீர்ப்பு வழங்கியது. மாறாக, தண்டனை கைதிகளுக்கு மன்னிப்பு வழங்கும் அதிகாரம் இந்தியா அரச முறையில், அமைச்சரவையால் மட்டுமே எடுக்கப்பட முடியும் என்றும் உச்ச நீதிமன்றம் கூறியது.

அதை விட முக்கியமாக, கருணை மனு மீதான, காபினெட் மற்றும் ஜனாதிபதியின் முடிவையும் உச்ச நீதிமன்றம் விசாரித்து, அந்த முடிவு அரசியல் சட்டத்திற்கு உட்பட்டே எடுக்கப்பட வேண்டும் என்றும் உறுதி செய்தது. அது போன்ற முறையையாவது, இங்கும் உச்ச நீதிமன்றம் செயல்படுத்தலாமே!

முருகன் துணை.

நல்லூர் சைவத் தமிழ்ப் பண்பாட்டுக் கலைக் கூடல்

# செவ்வழி நயனம்



# கல்வி அழகே அழகு

பெற்ற பிள்ளை கைவிட்டாலும் கற்ற கல்வி கைவிடாது என்கிறார் மகாத்மா காந்தி. சைவத்தை வளர்த்த காந்தியடிகளே இவ்வாறு கல்வியைப்பற்றி அழகாகக் கூறியுள்ளார்.

கத்தியினால் ஜெயித்த யுத்தத்தை விட யுக்தியினால் ஜெயித்த யுத்தம் அதிகம் என்றார் எட்மன் பர்க். கல்வியின் மகிமை அறிந்ததால் தான் நஞ்சு கொடுக்கப்படும் நேரம் வரைக்கும் கிரேக்க நாட்டு கவிதைகளை கேட்டுக் கொண்டும் படித்துக்கொண்டும் இருந்தார் சோக்கிரட்டீஸ். படித்தால் மட்டுமே பாரதத்தை பாராள வைக்க முடியும் என படித்துப் படித்துச் சொன்னார் அப்துல் கலாம். இவ் அறிஞர்கள் இவ்வாறு கூறியது எதற்காக? ஏனென்றால் கல்வியானது ஒரு மனிதனை எவ்வளவு தூரம் உயர்த்தும் என்பதைப் புரிய வைப்பதற்காக.

முற்காலத்தில் வாழ்ந்த ஔவையார் கூட எண்ணும் எழுத்தும் கண்ணெனத் தகும் என்றார். இதிலிருந்து முற்காலத்திலிருந்தே சமயமும் கல்வியும் ஒன்றுடனொன்று பின்னிப்பிணைந்துள்ளன என்பது தெட்டத் தெளிவாக தெரிகின்றது. ஓதாமல் ஒருநாளும் இருக்க வேண்டாம் என்பது உலக நீதி. ‘கற்கை நன்றே, கற்கை நன்றே பிச்சை புகினும் கற்கை நன்றே’ என்றார் அதி வீரராம பாண்டியன்.

கல்வி கற்க வேண்டுமாயின் இறைவழிபாடு அவசியம். நாம் இறைவனை வழிபட்டால் எமது உள்ளம் மகிழ்ச்சியடையும். அப்படி இருந்தால் கல்வி கற்க சுலபம். அம்மகிழ்சிசியுடன் கல்வி கற்றால் பணமில்லாது விட்டாலும் அதிவீரராம பாண்டியன் கூறியது போல பிச்சை எடுத்தாவது படிக்க வேண்டும் என்னும் ஆர்வம் ஏற்படும்.

கல்வி நெருப்பினால் வேகாது. வெள்ளத்தால் அடித்துச் செல்லப்படாதது. கள்வர்களால் கொள்ளையிடவும் முடியாத ஒன்று கல்வி. வாழ்க்கையில் முன்னேற நினைக்கின்றீர்களா? தயவு செய்து நேரத்தை வீணாக்காது கல்வி கற்பதிலும் இறை வழிபாடு செய்வதிலும் நேரத்தைக் கழியுங்கள். அப்படி இருந்தால் நாடும் முன்னேறும். நாமும் முன்னேறலாம்.

இறைவன் இல்லாது இவ்வுயிர்கள் ஏது என்பதை நாம் புரிந்து கொள்ள வேண்டும். உண்மையான அழகு என்னவென்றால் கல்வி அழகு. ஏனெனில் மன்னனுக்கு தன் தேசத்தில் மட்டும் தான் சிறப்பு. கற்றோர்க்குச் சென்ற இடமெல்லாம் சிறப்பு. நாயன்மார்கள் பாடிய தேவாரங்களின் பொருளை சாதாரண பாமர மக்களால் கூறமுடியாது. ஏனென்றால் அவர்கள் எவ்வளவு கல்வி அறிவு மிக்கவர்களாக இருக்க வேண்டும். இதிலிருந்து அவர்களின் கல்வி தான் அவர்கள் சமயத்தில் சுடர் விட்டுப்பிரகாசிப்பதற்கு காரணமாக உள்ளது என்பது உள்ளங்கை நெல்லிக்கனி போன்று தெட்டத் தெளிவாகத் தெரிகின்றது.

முற்காலத்தில் சமய விழுமியம் சார்ந்த குருகுலக் கல்வி முறையே கற்பிக்கப்பட்டது. அப்படியென்றால் எவனொருவன் சமயத்தில் சிறந்து விளங்குகின்றானோ அவனே கல்வியிலும் சிறந்து விளங்குவான் என திகழ முடிகின்றது. கல்வி என்பது இருள் நிறைந்த எமது வாழ்க்கைக்கு அகல் விளக்குப் போன்றது. மஞ்சள் பூசி முகத்தை வெளு வெளு என வைத்திருப்பது உண்மையான அழகு அல்ல. தமது திறமையை அறிந்து கற்றலே உண்மையான அழகு. கல்வியை முறையாகக்கற்று பல அறச்செயல்களைச் செய்வதன் மூலம் இம்மையில் மட்டுமன்றி ‘இம்மையில் கற்ற கல்வி எழுமையும் ஏமாப்புடைத்து’ ஏழு பிறவிகளும் நாம் வாழ்வாங்கு வாழ வழி வகுக்கும்.

‘கல்வி அழகே அழகு’
‘கற்கக் கசடற கற்றவை கற்றபின் நிற்க அதற்குத் தக’
‘எண்ணும் எழுத்தும் கண்ணெனத்தகும்’
‘கற்கை நன்றே, கற்கை றன்றே, பிச்சை புகினும் கற்கை நன்றே’

- ஜெ.வர்னிகா -
(அச்சுவேலி மத்திய கல்லூரி)



# கடமை

இலங்கை வேந்தனாக இருந்த இராவணன் தன் அரியணை ஏறும் படிகளில் நவக்கிரகங்களைக் குப்புறப் பதித்து அவற்றின் முதுகுப் பகுதியிற் கால் வைத்தே சிம்மாசனம் சென்று அமர்வான். ஒருபொழுது அவனது அரசவைக்கு வந்த கலகமுனி இதைக்கண்டு, ‘இராவணா! நீ எப்பேர்ப்பட்ட வீரன்; உன் தகுதிக்கு நவக்கிரகங்களைக் குப்புற வைத்து முதுகில் ஏறிச் செல்கிறாயே, இது உனக்கு இழுக்கு; உன் தகுதிக்கு அவற்றை நிமிர்த்தி வைத்துப் படிகளிற் பதித்து அவற்றின் நெஞ்சிற் கால்வைத்து அரியாசனம் ஏறினால் உனக்குப் பெருமை’ என்றார்.

அது கேட்டு மதிமயங்கி இராவணனும் அவ்வாறே செய்யச் சம்மதித்தான். அரியணை ஏறும் படிகளில் மாற்றம் செய்யப்பட்டது. குப்புற இருந்த நவக்கிரகங்கள் நிமிர்த்தி வைக்கப்பட்டன. இராவணன் அரியணை ஏற நவக்கிரகங்களின் நெஞ்சிற் கால்பதித்து நடக்கிறான். ஒரு படியிற் சனீஸ்வரன். அவர் பார்வை இராவணன் மேற்படுகிறது. அந்தோ பரிதாபம்! மூக்கறுபட்டுச் சூர்ப்பனகை அழுத வண்ணம் அண்ணா! எனக் கத்திக்கொண்டு வருகிறாள். இராவணனுக்குக் கஷ்டகாலம் ஆரம்பிக்கிறது.

ஒரு சமயம், அண்ட சராசரங்களைக் காத்தருளும் சிவபிரானிடம் சென்று சனீஸ்வரன், ‘தேவரீர்! தங்கள் ஆணைப்படி என் கடமையைச் செவ்வனே நிறைவேற்றி வருகிறேன். சற்று நாழிகைக்குத் தங்களைப் பீடிக்க வேண்டிய கடமை எனக்குள்ளது’ அதற்கு அனுமதி வழங்கவேண்டும்’ என்று பணிவோடு வேண்டினார்.


சிவபிரானும் சிரித்துக் கொண்டே, ‘சரி, சற்றுநாழிகை கழித்து வா!’ என்று பணித்தார். சனீஸ்வரனும் சற்று நாழிகை கழித்துச் சிவனிடம் வந்தபோது அவர் அங்கிருக்கவில்லை. இப்பொழுது சனீஸ்வரன் மெல்லச் சிரித்துக்கொண்டே அங்கிருந்து சென்றுவிட்டார். சனீஸ்வரனை ஏமாற்றச் சனீஸ்வரன் பீடிக்கும் நாழிகை வரை சிவபிரான் மாதுளம் பழத்தின் முத்துக்களோடு முத்தாக மறைந்திருந்தார்.

குறித்த நாழி கையும் முடிந்தது. சிவன் வெளிப்பட்டுச் சனீஸ்வரன் வருகைக்காகக் காத்திருந்தார். சனீஸ்வரனும் அங்கு வந்து சிவனை வணங்கி நின்றார்.

அப்பொழுது சிவன், சனிபகவானிடம் ‘எம்மைப் பீடிக்க அனுமதி கேட்டிருந்தாய், ஏன் வரவில்லை?’ என்று வினாவினார். சனிபகவானும், ‘அடியேன் கடமையைச் செய்துவிட்டேன் சுவாமி’ என்றார். ‘என்ன? என்னைப் பீடித்தாயா? எப்போது?’ என்று கேட்டார் சிவபிரான். அதற்குச் சனீஸ்வரனும் ‘இதுவும் தாங்கள் நடத்தும் நாடகந்தான் சுவாமி. அண்ட சராசரங்களையும் அடக்கியாளும் எம் பெருமானே தாங்கள் குறித்த நாழிகை வரை மாதுளம்பழ முத்துக்களுக்குள் மறைந்திருக்க நேர்ந்ததே; அதுதான் நான் தங்களைப் பீடித்த நாழிகை’ என்றார். சிவபிரானும் அதுகேட்டுப் புன்முறுவல் பூத்தார்.

மாணவர்களே! உங்களுக்குப் பணிக்கப்படும் கடமைக்கு முன் பேதம் பார்க்காதீர்கள். உங்களுக்கான கடமையைச் செவ்வனே செய்யுங்கள். நிச்சயம் நல்ல பலனுண்டு.

# பிள்ளைகளின் எதிர்காலம்



தன்னிடம் குருகுலக் கல்வி கற்க வந்த மூன்று சீடர்களுக்குக் குரு ஒரு பரீட்சை வைத்தார். தனித்தனியே மூவரையும் வெவ்வேறு இடத்திற்கு அழைத்துச்சென்று மூவருக்கும் ஒரே மாதிரியான உருவமுள்ள கற் பாறையைக் காட்டி, ‘நான் இன்னும் அரை நாள் கழித்து மீண்டும் இவ்விடம் வருவேன்; நான் திரும்பி வரும்போது இப்பாறை இந்த இடத்தில் இருக்கக் கூடாது’ என்று சொல்லிக் குரு புறப்பட்டு விட்டார்.

குருவின் கட்டளை. மூன்று சீடர்களும் செயற்படத் தொடங்கிவிட்டனர். குரு குறிப்பிட்ட அரை நாளும் முடிந்து விட்டது. குரு ஒவ்வொரு சீடர்களிடமும் சென்று பார்த்தார். மூவர் அருகிலும் பாறை இல்லை. முதலாமவனிடம் விசாரித்தார். அவன் பாறையைக் குழி தோண்டிப் புதைத்து விட்டதாகக் கூறினான். குரு இரண்டாமவனிடம் சென்றார். அவன் பாறையை அடித்து நொறுக்கி விட்டதாகக் கூறினான். மூன்றாவது சீடன் அந்தப் பாறையை அழகிய சிற்பமாக வடிவமைத்திருந்தான். குரு அவனைப் பாராட்டினார்.

மதிப்பிற்குரிய பெற்றோர்களே! இப்படித்தான் உங்கள் பிள்ளைகளின் எதிர்கால வாழ்வும் உங்கள் கைகளில் உள்ளது. அவர்கள் வாழ்வைக் குழி தோண்டிப் புதைப்பதும், அடித்து நொறுக்குவதும், அழகிய சிற்பமாக்குவதும் உங்கள் கைகளிற்தான் உள்ளது. சிறார்களின் வாழ்வு சிறப்புற அமைய அடிப்படையாய் அமைவது அறநெறியே. நீங்கள் உங்கள் பிள்ளைகள் நன்றாக வாழ வேண்டும் என்று கல்வி புகட்டுகின்றீர்கள். அக் கல்வியின் குறிக்கோள் பண்புடைமையே. இதுவே அறநெறிக் கல்வியின் மகுட வாசகம்.

காலைக்கதிர் Kalaikkathir

இக்கட்டுரையாளர் செல்லத்துரை ரவீந்திரன் சிரேஷ்ட சட்டத்தரணி. ஆஸ்திரேலியாவைத் தளமாகக் கொண்டு இயங்கும் இலங்கைப் புலம்பெயர் சட்டவாளர். இலங்கையில் சன்சோனிக் கமிஷன் விசாரணைகளில் தமிழர் தரப்பில் பிரதான பங்காற்றிய சட்டத்தரணி. தமிழ் புனர்வாழ்வுக் கழகத்தின் பிதாமகர்களுள் ஒருவர். தமிழரின் உரிமைப் போராட்டத்துடன் நெருக்கமாகச் செயற்பட்ட - செயற்படுகின்ற - புலமையாளர். 'காலைக்கதிர்' வாசகர்களுக்கு நன்கு அறியப்பட்ட கட்டுரையாளர். அரசையும் ஜனாதிபதியையும் பதவியை விட்டுப் போகும்படி வலியுறுத்தி தற்போது நடக்கும் போராட்டங்களை தமிழரின் உரிமைப் போராட்ட அனுபவங்களோடு இத்தொடரில் ஒப்பிட்டுப் பார்க்கின்றார் அவர்.



- செல்லத்துரை ரவீந்திரன் -

# யாழ்ப்பாணம் தொடக்கம் காலிமுகத்திடல் வரை...!

**அங்கம் - 170**

கேள்வி:- தீர்வு வரும் என்று நம்பி பேச்சு வார்த்தைகளில் ஈடுபட்டார்களா?

பதில்:- பேச்சுவார்த்தைகளில் தீர்வு வரும் என்ற உளமார்ந்த நம்பிக்கையில் இருதரப்புகளுமே அதில் ஈடுபடவில்லை. பேச்சுவார்த்தைகளைத் தத்தமது நிலைப்பாடுகளைப் பலப்படுத்திக் கொள்ளவே பாவித்தனர். விடுதலைப்புலிகள் தங்களது லட்சியமான தமிழீழத்தை அடைந்து கொள்வதற்காக மேலும் திட்டமிடக் கூடிய படிகளையே நோக்கினார்கள். ஸ்ரீலங்கா அரசோ இனப்பிரச்சனைக்கான தீர்வாக எவ்வளவு மிகவும் குறைவான அதிகாரப் பரவலை பேச்சின் மூலம் அடைந்துவிடக் குறியாக இருந்தது. அதே சமயம் இந்த பேச்சுவார்த்தைகளை முன்வைத்து, நிதி உதவிகள் பெற்று, வீழ்ந்திருந்த நாட்டின் பொருளாதாரத்தைப் பலப்படுத்தவும் திட்டங்கள் வைத்தது.


இறைமையுள்ள அரசு, இறைமைக்காகப் போராடும் விடுதலைப் போராளிகள் என்ற இரு பகுதிகளையும் சமநிலையில் வைத்து, சமாதானம் பேசுவது என்று ஏற்றுக் கொள்ளப்பட்டது.

இதனுடைய பரிமாணங்களும், தீர்வின் எதிர்பார்ப்புகளும், சமஷ்டி முறையில் அதிகாரப் பரவல் அமையலாம் எனப் பேச்சுக்கான இணக்கத்திற்கு வரும் முன்னரே இரு பகுதியினராலும் ஏற்றுக்கொள்ளப்பட்டிருந்தன. பேச்சு வார்த்தைகள் எந்தத் தரப்பினாலும் குழப்பப்பட்டு, முன்னெடுக்கப்படாமல் முடங்கினால், சர்வதேசங்கள் குழப்பத்திற்கான சூழ்நிலை எதுவானாலும், இறைமையுள்ள நாட்டுடன்தான் அணி திரளுவார்கள் என்ற பூகோள அரசியல் அறிவுகள் கணக்கில் இருந்திருக்க வேண்டும். ஐ.நா. கூட இறைமையுள்ள நாடுகளின் சங்கம் என்ற அச்சாணியில்தான் இயங்குகின்றது. அங்கு அங்கம் வகிக்கும் ஓர் இறைமை கொண்ட நாட்டின் சார்பாகவே அனேக முறைமைகள் இயங்குகின்றன. சமஷ்டி அடிப்படையிலான தீர்வை நோக்கிப் போகலாம் என ஒஸ்லோ அறிக்கை வெளியானதும், அதற்கு அனுசரணைகள் தராமல், தங்களது இலட்சியமான தமிழீழத்தை நோக்கிப் போக விரும்பிய அழுத்தங்களை விடுதலைப்புலிகள் வகுக்கிறார்கள் எனப் பேச்சுக்களில் அக்கறை கொண்டு ஈடுபட்டிருந்த சர்வதேச நாடுகள் அபிப்பிராயப்பட்டமையால் விடுதலை புலிகள் உண்மைதன்மையில் பங்குபற்றவில்லை என கருதினார்கள். அவை எழுந்து துர்ப்பாக்கிய நிலைகளை ஏற்படுத்தின.

கேள்வி:- முள்ளிவாய்க்காலில் தமிழ் மக்களுக்கு நடந்தவற்றுக்குப் பின்னராயினும் இனப் பிரச்சினைக்கான தீர்வுக்கு சர்வதேச அங்கீகாரம் உண்டா?

பதில்:- சாதாரண காற்று அடித்தாலே தூசியும் குப்பையும் பஞ்சும் அந்த காற்றில் பறக்கும். அடிப்பது புயலானால் அதில் வீட்டில் உள்ள கூரைகள் கூடப் பறக்கும். தமிழ் மக்களுக்கு சுனாமியை அடுத்து முள்ளிவாய்க்காலில் நடந்தது பிரளயம். அதில் அவர்களது ஆத்மாவே பறந்தது.

அதற்குப் பின்னால்தான் தீர்வு ஒன்றுக்கு சர்வதேச அங்கீகாரம் உருவாக வேண்டும் என்பதில்லை. அதற்கு முன்



பிரபாகரன்

னரே 1987இல் இந்திய ஒப்பந்தத்தால் அது உருவாகி இருந்தது. இந்தியப் பிராந்தியத்தில் அதன் ஆளுமையை ஒட்டி இந்த ஒப்பந்தத்தை சர்வதேசமும் ஏற்றுக்கொண்டது மீறவும் முயலவில்லை. இந்தியா அந்த நிலைப்பாட்டிலேயே இன்று வரை இருக்கிறது. நோர்வேயின் பேச்சுக் காலங்களில் இந்தியாவின் அணுகுமுறையைக் கவனித்தால் அது பார்வையாளனாகவே இருந்தது. இரண்டு பகுதிகளும் இணைந்து தாங்கள் ஏற்றுக் கொண்ட தீர்வுகளுக்கு வருவார்களாயின் அதற்கு இந்தியா அனுசரணை தரும் என்பதே நோர்வேயின் பல சுற்று பேச்சுக்களுக்கு அதன் பதிலாக இருந்தது. பேச்சுவார்த்தைகள் முறிந்து, மஹிந்த அரசு முடிவுக்கான போரை நடத்திய போது, அதற்கு இந்தியா உட்பட சர்வதேச ஆதரவு இருந்தது. அது விடுதலை புலிகளுக்கு எதிரானது, பயங்கரவாதிகளுக்கு எதிரானது என்ற முலாம் பூசப்பட்டது. ஆனாலும் தமிழ் மக்கள் இனப்படுகொலை செய்யப்பட்ட அதன் பின்னரான இந்த 13 வருட காலத்தில் கூட, சர்வதேசம் இந்தியாவை மீறிய தீர்வு ஒன்றை முன் வைத்ததில்லை. 1987 இல் ஏற்படுத்தப்பட்ட அந்த அங்கீகாரமே நடைமுறைப்படுத்தப்பட முடியாமல் இருப்பதற்கு முக்கிய காரணம் ஸ்ரீலங்கா அரசுகளின் விருப்பமற்ற தன்மைகளானாலும் அதற்கு துணை போவதான தமிழ் தரப்புக்களின் கூத்துக்களே முக்கியமானவையும் கூட.

தனது பிராந்தியத்தில் பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் வருகிறது என இந்தியா கணித்து, அதற்கு ஸ்ரீலங்கா துணை போகிறது என்று கருதி, தங்களது நலன்களுக்காகப் பிரிவினையை நடத்தி, தனி நாடு ஒன்றை அமைக்க இந்தியாவின் நிர்வாக அலகுகள் - பாதுகாப்புத் துறைகள் உட்பட - இணங்கினாலன்றி, தனி நாட்டும் கோரிக்கைக்கு - அது இறைமையை மீட்பது என லாவகமாகச் சொல்லப்பட்டாலும் - எந்த ஒரு நாடும் அதற்கு அங்கீகாரம் தரப்போவதில்லை.

இந்த யதார்த்தத்தை தமிழ் மக்கள் உணர்ந்து கொள்ள வேண்டும். ஆனாலும் அதனை மழுங்கடிப்பதிலேயே அவர்களது அரசியல் தொடர்கிறது. விடுதலை புலிகள் சமாதானப் பேச்சுவார்த்தைகளில் தங்களது இடைக்கால கட்டமைப்பை சமர்ப்பித்த போது, அடுத்தபடியான முன்னேற்றங்களுக்காக சில சர்வதேசம் கட்டமைப்புகளையும் உருவாக்கத்தில் வைத்திருந்தார்கள். அது, 'நாடு கடந்த தமிழீழ அரசாங்கம்' இந்தக் கட்டமைப்பு அவர்களது சட்டத்தரணி உருத்திரகுமாரனுக்கும் கே.பிக்கும் இடையில் முன்னேறி வர, பிரபாகரனின் நெருக்கடிகளும் வளர, 'பாதைகள் மாறலாம், ஆனால் லட்சியம் மாறாது' என்ற அடிப்படையில் இந்த அரசு சர்வதேசத்தின் பல நாடுகளிலும் தோற்றம் பெற்றது. அது இயங்கினாலும், எந்த நாட்டிலும் அதற்கு அங்கீகாரம் இதுவரைக் கிடைக்கவில்லை. விடுதலைப் புலிகளிடையே போரின் முடிவில் எழுந்த பிளவுகள், தமிழ் மக்களின் ஆளுமையான சமர்ப்பணங்களைப் பாதித்தன. இந்த உருவாக்கம் ஒருபுறம் இருக்க, விடுதலைப் புலிகள் கட்டுப்படுத்திய தமிழர் ஒருங்கிணைப்புக்குழு கலைக்கப்படாமல், தாம் அவர்களைப் பிரதிநிதித்துவப்படுத்துவோம் என தொடர்ந்தும் இயங்க, புலம்பெயரில் அவர்களுக்கு ஆதரவாக இருந்தவர்கள் ஆஸ்திரேலியா தமிழ் காங்கிரஸ், கனேடிய தமிழ் காங்கிரஸ், உலகளாவிய தமிழர் ஒன்றியம் எனப் பல்வகை அமைப்புக்களை தோற்றுவித்து யாவரும் ஒற்றுமையான அணுகுமுறைகளில், தமிழ் மக்களுக்கான பொது நோக்கைக் கொண்டு வராமல். தனி ஆவர்த்தனங்களை இன்று வரையும் வாசித்து, அவர்களில் எவரேனும் கூட அழுத்தமாக பிரதிநிதித்துவத்தை தரக் கூடிய திராணிகள் அற்று இருக்கிறார்கள்.

யுத்தத்தின் இடையிலும், நாடாளுமன்றத்தில் தமிழ் மக்களைப் பிரதிநிதித்துவப்படுத்திய கூட்டமைப்பினர் கூட, சர்வதேசத்தின் மூலம் ராஜதந்திர வழிகளில் அபிலாசைகளுக்கு தீர்வு காணப்படும் என்றார்கள். இன்னும் சில தரப்புகள் ஐ.நாவின் மனித உரிமை மன்றில் தமிழ் மக்களுக்கு நடந்ததை இனப்படுகொலையாக நிரூபித்து, அதன் அடிப்படையில் பிரகார நீதி கிடைக்கும் என்று நம்பிக்கை ஊட்டுகிறார்கள். இந்த 13 ஆண்டுகளில் ஐ.நா. மனித உரிமைகள் மன்றுக்கு சமர்ப்பணங்கள் எழுதியவற்றையும், வருடா வருடம் அங்கு விஜயங்கள் செய்ததிலும், அறிக்கைகள் வருகின்றன. அவற்றில் மனித உரிமை மீறல்களையும், மனிதாபிமானத்துக்கும் மனித குலத்துக்கும் எதிரான குற்றச்சாட்டுகளையும் குறிப்பிட்டு அவை விசாரணைக்கு உள்ளாக்கப்பட



கே.பத்மநாதன்

வேண்டும் என்ற சர்வதேசத்தின் பரிந்துரைகள் உருவாகியுள்ளன. அவை அரசியல் தீர்வுக்கான தீர்மானங்கள் இல்லை என்றாலும், இந்தியா 13 ஆவது திருத்தத்தை அமுல்படுத்துவதிலேயே இந்த மனித உரிமை மீறல்களைக் கட்டுப்படுத்தலாம் என்று அரசியல் தீர்வை இணைத்து சமர்ப்பணங்கள் தந்தது. போர் முடிந்து இன்று வரையான காலப்பகுதியில், தமிழ் மக்களின் அபிலாசைகளையோ, அன்றில் விடுதலைப் புலிகளின் இலட்சியத்தையோ முன்னெடுக்க என இவ்வளவு தரப்புக்களும் உருவாகி, யார் தமிழ் மக்களை பிரதிநிதித்துவப்படுத்துகிறார்கள் என்பதற்கு விவஸ்தையே இல்லாமல் இருக்கிறது.

அவை எல்லாவற்றிற்கும் மேலதிகமாக, இப்பொழுது, இவ்வளவு நாள்கள் பின் விடுதலைப் புலிகளின் அரசியல் குழு என்ற அமைப்பு உருவாகி, அவர்கள் தங்களது ஊடகங்களிலும், வானொலி, தொலைக்காட்சிகளிலும் கருத்தாக்கங்கள் வைக்கிறார்கள்.

அப்படியானால் இதுவரை தமிழ் மக்களையோ, விடுதலைப் புலிகளின் இலட்சியங்களையோ பிரதிநிதித்துவப் படுத்தியவர்கள் எது வித முன்னேற்றங்களையும் காணாதவர்கள் என்ற பொருளா? அன்றில் அவர்கள் அவற்றுக்குத் தகுதியற்றவர்கள், தாமே தான் அதற்கு உரித்தானவர்கள் என்ற நிலைப்பாடா? இவ்வளவு குளறுபடிகள், தான்தோன்றித்தனங்கள், ஆவணங்கள் போன்றவற்றிலிருந்து மீண்டும் அர்பணிப்புடனும் சாதுரியத்து



உருத்திரகுமாரன்

டனும் தகமைகளுடனும் முன்னேறுவதுதான் சர்வதேச அங்கீகாரத்திற்கான. பாதை எவையானாலும் சர்வதேசத்திலோ, ஐ.நாவிலோ இவை இந்தியாவின் பார்வைகளால் மட்டுப்படுத்தப்பட்டவையாகத்தான் இருக்கும் என்ற யதார்த்தத்தின் தெளிவும் வேண்டும்.

(வளரும்....)

காலைக்கதிர் Kalaikkathir

# 2023 ஆம் ஆண்டுவரவு - செலவு திட்டத்தில் அநாவசிய வேலைத்திட்டங்களுக்கு என்று நிதி ஒதுக்கக் கூடாது!

## கபிர் ஹஸீம் வலியுறுத்து



நாட்டில் தற்போது 20 கோடி டொலர் மாத்திரமே கையிருப்பில் உள்ளது. வறுமை நிலைமையிலுள்ள மக்களின் எண்ணிக்கையும் 96 லட்சமாக அதிகரித்துள்ளது.

எனவே அடுத்த வாரம் சமர்ப்பிக்கப்படவுள்ள வரவு – செலவுத் திட்டம் இந்த நெருக்கடிகளிலிருந்து மீளக் கூடிய வேலைத்திட்டங்களை உள்ளடக்கியதாகவே அமைய வேண்டும்.

அதில் அநாவசிய வேலைத்திட்டங்களுக்கு நிதி ஒதுக்கப்படக் கூடாது என்று ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் கபிர் ஹஸீம் தெரிவித்தார்.

கொழும்பிலுள்ள எதிர்க்கட்சி தலைவர் அலுவலகத்தில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் இதனைத் தெரி வித்த அவர் மேலும் குறிப்பிடுகையில் –

நாட்டில் தற்போது 20 கோடி டொலர் மாத்திரமே கையிருப்பில் உள்ளது. இந்த நிலைமைக்கு ராஜபக்ஷ குடும்பமே பொறுப்புக் கூற வேண்டும் என்பதில் எவ்வித மாற்றுக்கருத்தும் கிடையாது. இந்த வருடம் நெற் பயிர் செய்கை 42 சதவீதத்தால் வீழ்ச்சியடைந்துள்ளதாக ஆய்வொன்றில் தெரியவந்துள்ளது. 42 சதவீதம் என்பது சுமார் 30 லட்சம் மெற்றிக் தொன்களாகும். தேசிய உணவு உற்பத்தி இவ்வாறு பாரியளவில் வீழ்ச்சியடைந்தால் எவ்வாறு நாடு முன்னேற்றமடையும்?

பேராதனை பல்கலைக்கழகத்தால் முன்னெடுக்கப்பட்ட ஆய்வில் நாட்டில் வறுமை நிலையிலிருப்போர் எண்ணிக்கை 96 லட்சமாக அதிகரித்துள்ளமை தெரியவந்துள்ளது. 2019 ஆம் ஆண்டு ஆட்சி மாற்றத்தின் போது வறுமை நிலையில் இருந்தோர் எண்ணிக்கை 30 லட்சமாக மாத்திரமே காணப்பட்டது. வறுமை நிலைமையிலுள்ளோர் எண்ணிக்கையை இவ்வாறு பன்மடங்காக அதிகரித்து முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ கின்னஸ் சாதனை படைத்துள்ளார்.

தற்போது எமது பொருளாதார வளர்ச்சி வேகம் மறை 8.5 சதவீதமாகக் காணப்படுகிறது. இந்த வருடத்தில் இதனை விடவும் பின்னடைவை சந்திக்க நேரிடும் என்று பொருளாதார நிபுணர்கள் மதிப்பிட்டுள்ளனர். இந்த நிலைமையிலிருந்து மீள்வதற்கு அந்நிய செலாவணி வருமானத்தை அதிகரித்து, அதனை ஸ்திரப்படுத்திக் கொள்ள வேண்டும்.

அண்மையில் 3 கோடியே 50 லட்சம் ரூபாவிற்கு அதிவேக நெடுஞ்சாலையை அமைப்பதற்கான நிதி ஒதுக்கீட்டுக்காக அமைச்சரவை பத்திரம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. எனினும் இது உறுதிப்படுத்தப்பட்ட தகவல் அல்ல. அத்தோடு ஜனாதிபதி இதனை நிராகரித்துள்ளார் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

நாடு தற்போது எதிர்கொண்டுள்ள இந்த நெருக்கடி நிலைமையில் இவ்வாறான பாரிய வேலைத்திட்டங்கள் எதற்கு? இவ்வாறான யோசனைகளுக்கு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அனுமதி வழங்கக் கூடாது என்று வலியுறுத்துகின்றோம். மக்களுக்கு தேவையானவற்றுக்கு மாத்திரம் அடுத்த வருடத்துக்கான வரவு – செலவு திட்டத்தில் முன்னுரிமையளிக்கப்படும் என்று எதிர்பார்க்கின்றோம். – என்றார்.

# குறுகிய அரசியல் நோக்கங்களுக்காக போராட்டத்தில் ஈடுபடுவது அநாகரிகம்!

## மஹிந்தானந்த அளுத்கமகே



பொருளாதாரப் பாதிப்பு இலங்கைக்கு மாத்திரம் வரையறுக்கப்பட்ட விடயமல்ல முன்னேற்றமடைந்துள்ள நாடுகளும் தற்போது பொருளாதாரப் பாதிப்பை எதிர்க்கொண்டுள்ளன.

நாடு வழமைக்கு திரும்பும் போது குறுகிய அரசியல் நோக்கத்துக்காக போராட்டத்தில் ஈடுபடுகின்றமை அநாகரிகமானது என நாடாளுமன்ற உறுப்பினர் மஹிந்தானந்த அளுத்கமகே தெரிவித்தார்.

கொழும்பில் இடம்பெற்ற நிகழ்வில் கலந்துகொண்டதன் பின்னர் ஊடகங்களுக்கு கருத்துரைக்கையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் குறிப்பிட்டவை வருமாறு –

அமைதியான போராட்டத்தில் ஈடுபடும் உரிமை நாட்டு மக்களுக்கு உண்டு. அரசாங்கத்துக்கு எதிரான வன்முறைகள் நாட்டு மக்களின் அன்றாட வாழ்க்கைக்கு பாதிப்பை ஏற்படுத்தக் கூடாது.

எதிர்க்கட்சிகள் மற்றும் சிவில் அமைப்பினர் ஒன்றிணைந்து முன்னெடுக்கும் போராட்டம் எந்த அரசியல் நோக்கத்தைக் கொண்டுள்ளது என்பதை நாட்டு மக்கள் தெரிந்துகொள்ள வேண்டும்.

பொருளாதார நெருக்கடிக்குத் தீர்வு காணும் திட்டங்களை ஜனாதிபதி முன்னெடுத்துள்ளார். எரிபொருள், எரிவாயு விநியோக கட்டமைப்பு தற்போது வழமைக்குத் திரும்பியுள்ளது.

அத்தியாவசியப் பொருள்களின் விலை கட்டம் கட்டமாகக் குறைவடைவதை நாட்டு மக்கள் மறுக்கவில்லை.

எதிர்க்கட்சிகள் மற்றும் சிவில் அமைப்புக்கள் தொடர்பில் நாட்டு மக்கள் எவ்வகையான நிலைப்பாட்டைக் கொண்டுள்ளார்கள் என்பதை போராட்டத்தின் முடிவில் தெரிந்துக் கொள்ளலாம்.

நாட்டு மக்களின் நலனைக் கருத்திற் கொண்டு போராட்டத்தில் ஈடுபடவில்லை.

பொருளாதாரப் பாதிப்பு இலங்கைக்கு மாத்திரம் வரையறுக்கப்பட்டதல்ல. பொருளாதார ரீதியில் முன்னேற்றமடைந்துள்ள நாடுகள் கூட தற்போது பொருளாதார நெருக்கடியை எதிர்கொண்டுள்ளன.

பொருளாதார முகாமைத்துவம் தொடர்பாக அரசாங்கம் அதிக அவதானம் செலுத்தியுள்ளது.

குறுகிய அரசியல் நோக்கத்துக்காக போராட்டத்தில் ஈடுபடுகின்றமை அநாகரிகமானதாகும். சுற்றுலாத்துறை மேம்பட்டால் மாத்திரமே வெளிநாட்டுக் கையிருப்பு நெருக்கடிக்கு தீர்வு காண முடியும் என்பதைப் போராட்டத்தில் ஈடுபடுபவர்கள் தெரிந்துகொள்ள வேண்டும். – என்றார்.

# உணவுப் பணவீக்கம் உயர்வாகவுள்ள நாடுகளில் இலங்கைக்கு 6 ஆம் இடம்!

உலகளாவிய ரீதியில் உணவுப்பணவீக்கம் கூடிய முதல் 10 நாடுகளின் பட்டியலில் கடந்த செப்ரெம்பர் மாதம் 3 ஆவது இடத்திலிருந்த இலங்கை, கடந்த ஒக்ரோபர் மாதம் 6 ஆவது இடத்துக்குச் சென்றிருக்கின்றது.

உலக வங்கியின் அறிக்கையின் பிரகாரம் உரிய தரவுகளின் அடிப்படையில் கணிப்பிடப்பட்ட ஆண்டுக்கு ஆண்டு சராசரி உண்மை உணவுப்பணவீக்கம் கடந்த செப்ரெம்பரில் 30 சதவீதமாகப் பதிவாகியிருந்த நிலையில், அது ஒக்ரோபரில் 14 சதவீதமாக வீழ்ச்சியடைந்திருக்கின்றது.

கடந்த ஜூன் – செப்ரெம்பர் மாதம் வரையான காலப்பகுதியில் உலகளாவிய ரீதியில் ஒவ்வொரு நாடுகளினதும் உணவுப்பணவீக்கம், உணவுப்பொருள்களுக்கான கேள்வி மற்றும் நிரம்பல் உள்ளிட்ட பல்வேறு காரணிகளை அடிப்படையாகக் கொண்டு அந்நாடுகளின் உணவுப்பாதுகாப்பு நிலை எவ்வாறான மட்டத்தில் உள்ளது என்பதை மதிப்பீடுசெய்து, அதனை அடிப்படையாகக்கொண்டு உலக வங்கியிலேயே வெளியிடப்பட்டிருக்கும் அறிக்கையிலேயே இலங்கை மேற்குறிப்பிட்டவாறான நிலையிலிருப்பதாகக் கணிப்பிடப்பட்டுள்ளது.

நாடு கடந்த சில மாதங்களாகப் பாரிய பொருளாதார நெருக்கடிக்கு முகங்கொடுத்திருக்கும் நிலையில், உணவு, உணவல்லாப்பொருள்களின் விலைகளில் ஏற்பட்ட சடுதியான அதிகரிப்பால் வெகுவாக உயர்வடைந்த உணவு மற்றும் உணவல்லாப் பணவீக்கம் என்பன இப்போது மீண்டும் வீழ்ச்சியடைந்து வருகின்றன.

இவ்வாறானதொரு பின்னணியில் கடந்த சில மாதங்களில் உலகநாடுகளில் அவதானிக்கப்பட்ட உணவுப்பொருள்களின் விலையேற்றம், அவற்றுக்கான கேள்வி – நிரம்பல் உள்ளிட்ட பல்வேறு காரணிகளை அடிப்படையாகக்கொண்டு உணவுப்பணவீக்கம் கூடிய முதல் 10 நாடுகளின் பட்டியலை உலக வங்கி அதன் அறிக்கையில் உள்ளடக்கியிருக்கின்றது.

அதில் ஆண்டுக்கு ஆண்டு உண்மை உணவுப்பணவீக்கத்தின்படி 68, 36, 32, 15, 15, 14, 14, 14, 12, 10 என்ற சதவீதங்களில் முறையே சிம்பாவே, லெபனான், ஈரான், ஹங்கேரி, கொலம்பியா, இலங்கை, ஜிபூட்டி (வடகிழக்கு ஆபிரிக்காவிலுள்ள தீவு), ருவாண்டா, புர்கினாபாஸோ, கொஸ்டாரிகா ஆகிய நாடுகள் உணவுப்பணவீக்கம் கூடிய முதல் 10 நாடுகளாக வரிசைப்படுத்தப்பட்டுள்ளன.

அதன்படி உணவுப்பணவீக்கம் கூடிய நாடுகளின் பட்டியலில் (உணவுப்பாதுகாப்பு குறைவான நாடுகள்) கடந்த செப்ரெம்பரில் 3 ஆவது இடத்திலிருந்த இலங்கை, தற்போது உணவுப்பணவீக்கம் படிப்படியாகக் குறைவடைந்து வருவதன் விளைவாகக் கடந்த ஒக்டோபரில் 6 ஆவது இடத்திற்குச் சென்றிருக்கின்றது.

அதேவேளை ஆண்டுக்கு ஆண்டு பெயரளவிலான உணவுப்பணவீக்க மதிப்பீட்டின் பிரகாரம் இலங்கை (86 சதவீதம்) 4 ஆவது இடத்திலிருப்பதுடன் முதல் 5 இடங்களில் முறையே சிம்பாவே, லெபனான், வெனிசூலா, துருக்கி மற்றும் ஆர்ஜென்டினா ஆகிய நாடுகள் உள்ளமை குறிப்பிடத்தக்கது.

# கேக் மற்றும் பிஸ்கட் உள்ளிட்ட 5 பொருள்களுக்கு அதிகபட்ச சில்லறை விலை நிர்ணயிக்கப்படவேண்டும்

## வர்த்தமானி வெளியீடு

*கொழும்பு, நவ.03*

இலங்கைக்கு இறக்குமதி செய்யப்படும் ஐந்து பொருள்களுக்கு அதிகபட்ச சில்லறை விலை நிர்ணயிக்கப்பட வேண்டும் என்று நிபந்தனை விதித்து நுகர்வோர் விவகார அதிகாரசபை அதிவிசேட வர்த்தமானி அறிவித்தலொன்றை வெளியிட்டுள்ளது.

இது தொடர்பான வர்த்தமானி அறிவித்தல் செவ்வாய்க்கிழமை முதல் அமுலுக்கு வருவதாக அந்த அதிவிசேட வர்த்தமானியில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதன்படி, இறக்குமதி செய்யப்படும் சுவிங்கம் உள்ளிட்ட இனிப்புகள், சொக்லேட், பிஸ்கட், கேக் மற்றும் வாசனை சவர்க்காரங்கள் ஆகியவற்றுக்கு அதிகபட்ச சில்லறை விலை நிர்ணயிக்கப்பட வேண்டும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்தப் பொருள்களை நாட்டுக்குக் கொண்டு வரும் போது இறக்குமதியாளர்கள் அதிகபட்ச சில்லறை விலை, இறக்குமதியாளரின் பெயர் மற்றும் பதிவுசெய்யப்பட்ட முகவரி ஆகியவற்றை ஆங்கிலத்தில் தெளிவாகப் பதிவுசெய்ய வேண்டும் என நுகர்வோர் விவகார அதிகாரசபை தெரிவித்துள்ளது.

# பொருள்களின் விலைக் குறைப்பின் பயனை மக்களுக்குச் சென்றடைய நடவடிக்கைகள்!

## நளின் பெர்னாண்டோ தெரிவிப்பு



பொருள்களின் விலை குறைப்பின் பயனை மக்களுக்கு வழங்க நடவடிக்கை எடுக்கப்படும் என வர்த்தக அமைச்சர் நளின் பெர்னாண்டோ தெரிவித்தார்.

இந்த விடயம் தொடர்பாக மேலும் தெரிவித்த அவர் –

பல தொழிலதிபர்கள் அந்த பலனை மக்களுக்கு வழங்குவதில்லை என்றும் கூறினார்.

இதன்படி, பல்பொருள் அங்காடிகள் உள்ளிட்ட உணவு விநியோக சங்கங்களின் பிரதிநிதிகளுடன் கலந்துரையாடி தேவையான தீர்வுகளை வழங்கவுள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார்.

## இம்ரான்கானின் மீது ...

(02ஆம் பக்கத் தொடர்ச்சி)

கட்சித் தொண்டர் ஒருவர் உயிரிழந்துள்ளார். அறுவர் காயமடைந்துள்ளனர்.

இம்ரான் கானின் கொள்கலன் வாகனத்தின் மீது நபர் ஒருவர் தன்னியகத் துப்பாக்கியினால் சுட்டுள்ளார் என தகவல்கள் வெளியாகியுள்ளன.

இம்ரான் கான் மீது 3, 4 தடவைகள் துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்டதாக பி.ரி.ஐ. கட்சியின் பிரமுகர் இம்ரான் இஸ்மாயில் தெரிவித்துளளார்.

காயமடைந்த இம்ரான் வைத்தியசாலைக்கு அழைத்துச் செல்லப்பட்டார். கொள்கலன் வாகனத்திலிருந்து இறங்கும்போது ஆதரவாளர்களை நோக்கி அவர் கையசைத்தார்.

## இம்ரானை கொல்லவே ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மக்களை தவறாக வழிநடத்துகிறார் என்ற கோபத்தில் அவரைக் கொல்லத் தாம் விரும்பினார் எனவும் கூறியுள்ளார்.

இதுதொடர்பான வீடியோவை பத்திரிகையாளர் ஒருவர் பகிர்ந்துள்ளார்.

## முடிவுகளை கொள்கை ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தலைவர் சுரேஷ் பிரேமச்சந்திரனும் முன்னர் அவ்வாறே செயற்பட்டார் எனவும் கூறியிருந்தார்.

சிறீதரனின் அந்தக் கூற்று தொடர்பில் கருத்து தெரிவிக்கும்போதே ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் துணைச்செயலாளரும் வடக்கு மாகாணத்தின் முன்னாள் கல்வியமைச்சருமான கலாநிதி கந்தையா சர்வேஸ்வரன் மேற்கண்ட கேள்வியை எழுப்பியுள்ளார்.

கடந்த 2020ஆம்ஆண்டுநடைபெற்ற நாடாளுமன்ற தேர்தலின்போது சுமந்திரனுக்கு ஆதரவளிப்பதால் நான் தோல்வியடைந்தாலும் பரவாயில்லை என்று சொன்ன சிறீதரன் இன்று இந்த முடிவிற்கு வந்திருக்கிறார் என்றும் அவர் சுட்டிக் காட்டியுள்ளார்.

சிறீதரனின் கருத்துகளுக்கு பதிலளிக்கும் வகையில் ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் துணைச் செயலாளர் கலாநிதி கந்தையா சர்வேஸ்வரன் விடுத்துள்ள ஊடக அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

யாழ் நாடாளுமன்ற உறுப்பினர் சிறீதரன் டான் தொலைக்காட்சிக்கு வழங்கியிருந்த செவ்வி ஒன்று கடந்த 30.10.2022 ஞாயிற்றுக்கிழமை அன்று மாலை 7மணிக்கு அந்த தொலைக்காட்சியில் ஒளிபரப்பாகியது. இதன் சில பகுதிகள் சமூக ஊடகங்களிலும் வெளியாகியிருந்தன. அரசியல் யாப்பின் 22ஆவது திருத்தத்திற்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பிளவுபட்டு வாக்களித்தமை தொடர்பாக கேள்வி எழுப்பப்பட்டது. இதற்கு பதிலளித்த சிறீதரன் முடிவுகளைக் கலந்து பேசாமல் சுமந்திரன் தானே எடுத்துவிட்டு அவற்றை எம் மீது திணிக்க முயல்கிறார் என்று கூறியிருந்தார். இதனால் எதிர்காலத்தில் அவர் எடுக்கும் முடிவுகளுக்கு எதிராகச் செயற்படுவது எனத் தம்மில் பெரும்பாலோர் தீர்மானித்துள்ளனர் என்றும் தெரிவித்திருந்தார்.

இதனைக் கூறும்போது முன்னர் கூட்டமைப்பின் பேச்சாளராகச்செயற்பட்ட சுரேஷ் பிரேமச்சந்திரனும் அவ்வாறே நடந்துகொண்டார் என்றும், ஆனால் அவை பாரதூரமானவையல்ல என்றும், சுமந்திரனின் செயற்பாடுகள் அவரைவிட மோசமானவை என்ற பொருள்படவும் தெரிவித்திருந்தார்.

இது ஒரு மாணவனை நீங்கள் பரீட்சையில் ஏன் தேர்ச்சி பெறவில்லை என்று பெற்றோர் கேட்டதற்கு அந்த மாணவன் பக்கத்து வீட்டுப் பையனும் தேர்ச்சி பெறவில்லை என்று சொன்னதைப்போல் உள்ளது. இது அவரது அரசியல் முதிர்ச்சியின்மையைக் காட்டுகிறது.

எமது கட்சியின் தலைவர் சுரேஷ் பிரேமச்சந்திரன் அவர்கள் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பேச்சாளராகவே செயற்பட்டிருந்தார். ஆனால் சுமந்திரன் இன்று தமிழரசுக் கட்சியின் பேச்சாளராகவும் கூட்டமைப்பின் பேச்சாளராகவும் தனக்குத் தானே முடிசூட்டிக்கொண்டு செயற்பட்டுவருகின்றார். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பரந்துபட்ட கொள்கை சட்டகத்திற்குள்ளேயே சுரேஷ் பிரேமச்சந்திரன் தனது உத்தியோக பூர்வ பேச்சாளர் கடமைகளை ஆற்றிவந்தார். கலந்துபேசி முடிவெடுக்க வேண்டிய விடயங்கள் தொடர்பில் அவர் தன்னிச்சையாக என்றும் தனது கருத்துகளை கூட்டமைப்பின் கருத்தாக வெளியிட்டமை கிடையாது. மாறாக, உத்தியோகபூர்வ பேச்சாளராகவும் அங்கத்துவக் கட்சியின் தலைவராகவும் இருக்கக்கூடிய சுரேஷ் பிரேமச்சந்திரனுடனோ ஏனைய அங்கத்துவக் கட்சிகளுடனோ கலந்து பேசாமல், சம்பந்தன், சுமந்திரன் போன்றோர் தாமே முடிவுகளை எடுத்து அதனை கூட்டமைப்பின் முடிவாக ஊடகங்களுக்கு அறிவித்த சம்பவங்கள் ஏராளம். கூட்டமைப்பின் உத்தியோகபூர்வ பேச்சாளர் என்ற வகையிலும் கூட்டமைப்பின் அங்கத்துவக் கட்சியின் தலைவர் என்ற வகையிலும் அவர்களது செயற்பாடுகள் எமது தலைவரை தர்மசங்கடத்தில் ஆழ்த்தியிருந்தன என்பது அனைவருக்கும் தெரியும். அங்கத்துவக் கட்சிகளுக்கு உடன்பாடில்லாத முடிவுகளை எடுத்துவிட்டு அவற்றை அங்கத்துவக் கட்சிகளின்மீது திணிக்கின்ற நடைமுறைகளுக்கு எதிராக ஈ.பி.ஆர்.எல்.எவ். மட்டுமே ஓங்கிக் குரல்கொடுத்து வந்தது. அங்கத்துவக் கட்சியின் தலைவர் என்ற வகையில், சம்பந்தன், சுமந்திரன் போன்றோரின் இத்தகைய செயற்பாடுகளைக் கூட்டமைப்பிற்குள் விமர்சித்தபோதிலும் அதில் தீர்வு கிட்டாமையால், வெளியில் வந்து அவர்களது தான்தோன்றித்தனமான செயற்பாடுகளை சுட்டிக்காட்ட வேண்டிய நிர்ப்பந்தம் எமது கட்சிக்கு ஏற்பட்டது.

உண்மைகள் இவ்வாறிருக்க, திருவாளர் சிறீதரன் போக்கடிப் போக்கில் பொய்யாகவும் பிழையாகவும் பொறுப்பின்றிப் பேசியிருக்கிறார். சுமந்திரன் இலங்கைத் தமிழரசுக் கட்சியினதும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினதும் பேச்சாளராக இருப்பதன் மூலம், தனது முடிவுகளை கட்சியின் முடிவுகளாகவும் கூட்டமைப்பின் முடிவுகளாகவும் தான்தோன்றித்தனமாக வெளியிட்டு வருகின்றார் என்று கூட்டமைப்பினர் கருத்து வெளியிட்டு வருகின்றமை கண்கூடு. இன்று திருவாளர் சுமந்திரன் தமிழரசுக் கட்சிக்குள்ளேயே கலந்துபேசி முடிவுகள் எடுக்கப்படுவதில்லை என்ற கருத்தை சிறீதரன் பொது வெளியில் தெரிவித்துள்ளார். இதன் மூலம் ஒருபுறம் உட்கட்சிப் பிரச்சினையை பொதுவெளிக்குக் கொண்டு வருவதன் ஊடாக கட்சி என்றால் என்ன, கட்சிக்கட்டுப்பாடு என்றால் என்ன என்று தெரியாத தனது முதிர்ச்சியின்மையையும், மறுபுறம் சுமந்திரன் எடுக்கின்ற முடிவுகள் அனைத்தையும் எதிர்ப்போம் என்று தெரிவித்திருப்பதன் மூலம் கொள்கை அடிப்படையில் முடிவுகளை மேற்கொள்வதை விடுத்து, நபர்கள் சார்ந்து முடிவெடுத்திருப்பதானது சிறீதரனின் அடிப்படை அரசியல் அறிவைக் கேள்விக்குள்ளாக்குகின்றது.

நாற்பத்தாறு ஆண்டுகாலமாக தன்னை முழுநேரமாக தமிழ்த் தேசிய இனத்தின் விடிவிற்காக அர்ப்பணித்துச் செயற்பட்டுவரும் ஒருவரைக் குறித்து அவராலேயே அரசியலுக்கு அறிமுகம் செய்யப்பட்ட ஒருவர் அதிலும் ஆசிரியர் தொழிலில் ஈடுபட்டிருந்த ஒருவர் சேறுபூச முற்படுவதானது படிப்பது தேவாரம் இடிப்பது சிவன்கோயில் என்னும் முதுமொழிக்கு ஒப்பானது. - என்றார்.

விளம்பரத் தொடர்புகளுக்கு -
தொலைபேசி இலக்கம்
076 443 8622
kalaikkathiradvt@gmail.com



காலைக்கதிர் Kalaikkathir

# பைசர் காலாவதியாகியதால் மற்றொரு தடுப்பூசியை நாட்டுக்கு கொண்டுவர நடவடிக்கை எடுக்கவேண்டும்

## அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் வலியுறுத்து

நாட்டுக்கு மற்றொரு தடுப்பூசியைக் கொண்டுவருவதற்கான நடவடிக்கை தொடர்பாகக் கொரோனா தொழில்நுட்ப வல்லுநர் குழு அரசாங்கத்திடம் பரிந் துரைகளை மேற்கொள்ள வேண்டும் என்று அரசாங்க மருத்துவ அதிகாரிகள் சங்கத்தின் செயலாளர் வைத்தியர் ஹரித அளுத்கே தெரிவித்தார்.

இந்த விடயம் தொடர்பாக ஆங்கில ஊடகமொன்றுக்குத் தெரிவித்துள்ள அவர், சீனாவில் தயாரிக்கப்பட்ட சினோபார்ம் தடுப்பூசிகளை பூஸ்டர் தடுப்பூசிகளாகப் பயன்படுத்த முடியாது என்பதால், மற் றொரு தடுப்பூசியைக் கொண்டுவருவதற் கான நடவடிக்கையை எடுக்க வேண்டும் என்று அவர் கூறினார்.

இந்த விடயம் தொடர்பாக தொழில் நுட்பக் குழு ஆராய்ந்து மற்றொரு தடுப் பூசியை நாட்டுக்குக் கொண்டுவர வேண் டும் என்றும் அது எப்போது சாத்தியம் என்பதைத் தீர்மானிக்க வேண்டும் என்றும் அவர் கூறினார்.

உலக சுகாதார அமைப்பின் பரிந்து ரையின் பேரில் பைசர் தடுப்பூசிகளின் காலாவதி திகதியை சுகாதார அமைச்சு நீட்டித்ததாக அவர் கூறினார்.

அதன்படி, பைசர் தடுப்பூசிகளின் காலாவதித் திகதியின் மூன்று மாத கால நீடிப்பு கடந்த திங்கட்கிழமை முடிவடைந் ததாக அவர் தெரிவித்தார்.

பைசர் தடுப்பூசி திட்டம் நிறுத்தப்பட்டு, சினோபார்ம் தடுப்பூசி இன்னும் செயற்பாட் டில் உள்ளது என்றும் பைசர் தடுப்பூசியைப் போல சினோபார்ம் தடுப்பூசியில் போது மான வலிமை இல்லாததால், அதற்கான தேவை இல்லை என்றும் அவர் குறிப்பிட் டார். சினோபார்ம் தடுப்பூசிகளை பூஸ்டர் தடுப்பூசிகளாகப் பயன்படுத்த முடியாது என்றும் அவர் கூறினார்.

கொரோனா வைரஸ் மீண்டும் நாட்டில் பரவாமல் தடுக்க என்ன தகுந்த நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பது தொடர்பாகத் தொழில்நுட்பக் குழு கூடி முடிவெடுக்க வேண்டும் என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

புதிய கொவிட் மாறுபாடுகள் தொடர்பாக உலகம் முழுவதும் பல்வேறு விவாதங்கள் உள்ளன. ஆனால் போதுமான முன்னெச் சரிக்கைகள் எடுக்கப்படவில்லை. அதற் குப் பதிலாக, பெரும்பாலான நாடுகள் சுகாதார வழிகாட்டுதல்களைத் தளர்த்துவது தொடர்பான முடிவுகளை எடுக்கின்றன என்றும் அவர் குற்றம்சாட்டினார்.

எங்கள் சமூகத்தில் எங்களுக்கு நல்ல நோய் எதிர்ப்பு சக்தி உள்ளதுடன், கொரோனா இறப்புக்கள் அரிதாகிவிட்டன எனவும் அவர் தெரிவித்தார்.

எவ்வாறாயினும் உலகம் மீண்டும் ஒரு கடுமையான மாறுபாட்டால் பாதிக்கப்படும் வரை பெரிய ஆபத்து எதுவும் இல்லை என்றும் அவர் கூறினார்.

# புத்திசாலிகள், படித்தவர்கள் என கூறிக்கொள்ளும் அரசியல்வாதிகள் தொடர்பில் நாமலுக்குக் கவலை!



புத்திசாலிகள், படித்தவர்கள் என்று கூறிக்கொள்ளும் சில அரசியல்வாதிகள் குறுகிய மனப்பான்மையுடன் அரசியல் நிகழ்ச்சி நிரல்களை முன்னெடுப்பதில் மாத்திரம் ஆர்வம் காட்டுகின்றமை தொடர் பாக தான் வருத்தமடைகிறார் என நாடாளு மன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ தெரி வித்துள்ளார்.

முன்னாள் அமைச்சர் சன்ன ஜயசுமன வின் கருத்துக்கு பதிலளித்த அவர் சன்ன ஜயசுமன தனது முந்தைய அறிக்கையில் எதிர்வரும் வரவு செலவுத் திட்டம் தோற்கடிக் கப்படும் என்று முன்னறிவித்துள்ளார். அவர் கட்சியை விட்டு வெளியேறியதால், இதுபோன்ற அறிக்கையை வெளியிடு கின்றமை வெளிப்படையானது என்று கூறியுள்ளார்.

இந்த யோசனைகளை நாம் விமர் சிக்காமல் மக்களின் பக்கம் நின்று தீர்மா னங்களை எடுக்க வேண்டும் என நாமல் ராஜபக்ஷ மேலும் தெரிவித்துள்ளார்.

# போதையை தரும் வலி நிவாரணி மாத்திரைகளை மருந்தகங்களும் விற்கின்றன எனக் குற்றச்சாட்டு!

மருத்துவ சிட்டை இல்லாவிடின் 25 ரூபா வலி நிவாரணி மாத்திரைகளை 250 ரூபாவுக்கு சில மருந்தகங்களில் விற் பனை செய்யப்படுகின்றன எனத் தெரி விக்கப்படுகிறது.

வடக்கு ஆளுநர் அலுவலகத்தில் நீதி அமைச்சர் விஜயதாச தலைமையில் இடம்பெற்ற கலந்துரையாடலின் போதே இந்த விடயம் தெரிவிக்கப்பட்டது.

சில வலி நிவாரணி மாத்திரைகளை அதிகளவில் உட்கொள்ளும் போது, அவை போதையைத் தரக் கூடியவை.

அவ்வாறான மாத்திரைகளை மருத் துவர்களின் பரிந்துரை இன்றி உட்கொள் வது உயிராபத்தை ஏற்படுத்தக் கூடியது. அதனால் அந்த மாத்திரைகளை மருத்து வர்களின் பரிந்துரை சிட்டை இன்றி மருந்தகங்களில் விற்பனை செய்கின் றமை சட்டவிரோதமானதாகும். இவ்வா றான நிலையில் வடக்கில் உள்ள சில மருந்தகங்களில் 25 ரூபா பெறுமதியான குறித்த வலி நிவாரணி மாத்திரையை மருத்துவர்களின் பரிந் துரை சிட்டை இல்லாமல் வழங்குவதா யின் அதனை 250 ரூபாவுக்கும் அதிக மாக விற்பனை செய்கின்றனர் எனத் தெரிவிக்கப்பட்டது.

அதேவேளை மருத்துவர்கள் சிலரும் இந்த மாத்திரைகளை சட்டவிரோதமான முறையில் விற்பனை செய்து வருகின் றனர் எனவும் தெரிவிக்கப்பட்டது.

யாழ்ப்பாணத்தில் உள்ள மருத்து மொத்த விற்பனை நிலையத்தில் யாழ்ப் பாணத்தை சேர்ந்த மருத்துவர் மற்றும் வவுனியாவை சேர்ந்த மருத்துவர் ஆகிய இருவரும் பெருந்தொகையாக வலி நிவாரணி மாத்திரைகளை கொள்வனவு செய்திருந்தமை தொடர்பில் வடமாகாண சுகாதார அமைச்சால் விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# கிழக்கு மாகாண கல்வி திணைக்களத்திற்கு முன்பாகவும் ஆர்ப்பாட்டம் ஒன்று நடந்தது!

கிழக்கு மாகாணத்தில் உள்ள கஷ்டப் பிரதேச பாடசாலைகளில், கடந்த ஐந்து வருட காலமாக பணிபுரிந்து வரும் ஆசிரி யர்கள் தமக்கான இடமாற்றம் இன்னமும் வழங்கப்படவில்லை எனத் தெரிவித்து கிழக்கு மாகாண கல்வி திணைக்களத் துக்கு முன்பாக ஆர்ப்பாட்டம் ஒன்றில் ஈடுபட்டனர்.

இதுவரை காலமும் பணிக்கு அமர்த் தப்பட்டு ஐந்தாவது வருடத்தைப் பூர்த்தி செய்த பின்னர் தமக்கான இடமாற்றத்தைப் பெறுவதற்கான அனுமதி கோரப்பட்ட போதிலும் இந்த வருடம் மேலும் இன்னும் ஒரு வருடத்தை அதாவது ஆறு வருடத்தைப் பூர்த்தி செய்த பின்னரே இடமாற்றத்துக்கு விண்ணப்பிக்க முடியும் எனத் தெரிவிக் கப்பட்டுள்ளதன் காரணமாக தாம் மிகுந்த மன உளைச்சலுக்கு உள்ளாகியிருப்பதாக ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்கள் தெரி வித்தனர்.

கடந்த ஐந்து வருட காலத்துக்கும் மேலாக நாளொன்றுக்கு 80 கிலோமீற்றர் தூரம் வரை பயணித்து தாம் பணிபுரிந்து வருவதாகவும் இதன் காரணமாகத் தாம் பாரியமான உளைச்சல்களுக்கு உள் ளாகி இருப்பதாகவும் தெரிவித்த ஆசிரி யர்கள், காலை 5 மணிக்கு தாம் பணிக் காகப் புறப்பட்டால் மாலை 5 மணி வரை வீடு செல்ல முடியாது இருப்பதாகவும் தெரி வித்தனர். இடமாற்றத்துக்கான விண்ணப் பம் கோரப்பட்டு அனைவரும் அதனைப் பூர்த்திசெய்து அனுப்பிய பின்னராக திடீ ரென ஆறு வருட பணியைப் பூர்த்தி செய் தவர்களுக்கே இடமாற்றம் வழங்கப்படும் என தெரிவிப்பது தம்மால் ஏற்றுக்கொள்ள முடியாது எனக் குறிப்பிட்டனர்.

இதன் காரணமாக தமது கோரிக்கை களை கருத்தில் கொண்டு தமக்கன இட மாற்றத்தைப் பெற்று தருமாறு கோரிக்கை விடுத்தனர்.

# கட்சிகளின் உள்ளக ஜனநாயகம் தொடர்பில் பிரச்சினை உள்ளதாம்!

## தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவிப்பு

கட்சிகளின் உள்ளக ஜனநாயகம் தொடர்பில் தேர்தல்கள் ஆணைக்குழு விற்கு பிரச்சினை ஏற்பட்டுள்ளதாக அதன் தலைவர் சட்டத்தரணி நிமல் புஞ்சிஹேவா தெரிவித்துள்ளார்.

கண்டி மாவட்ட செயலகத்தில் நடை பெற்ற தேர்தல் முறைமை தொடர்பாக மக்களைத் தெளிவுபடுத்தும் நிகழ்வில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

இதேவேளை, இதில் கலந்துகொண்ட தேர்தல் ஆணையாளர் நாயகம் சமன் ஸ்ரீ ரத்நாயக்க, உள்ளூராட்சி மன்றத் தேர்தலை தற்போதுள்ள சட்ட கட்டமைப் பிற்குள் நடத்துவதற்கு தயார் எனத் தெரிவித்தார். வளர்ச்சியடையாத நாட்டில் வாக்கெடுப் பை நடத்துவதும் அபிவிருத் தியே எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

# முட்டையின் விலை குறையும் வாய்ப்பு!

முட்டை ஒன்றின் விலை 10 ரூபா தொடக்கம் 7 ரூபாவால் குறைக்கப்பட லாம் என அகில இலங்கை முட்டை வர்த் தக சங்கம் தெரிவித்துள்ளது.

எவ்வாறாயினும், சில கோழிப்பண் ணை உரிமையாளர்களின் தலையீட்டில் இந்த விலை குறைப்பு செய்யப்படமாட்டாது என சங்கத்தின் செயலாளர் அனுர மார சிங்க ஊடகமொன்றுக்கு தெரிவித்துள் ளார். இதற்கிடையில், கால்நடை உற்பத்தி மற்றும் சுகாதாரத் திணைக்களம், கால் நடை தீவனத்திற்கு சோளத்திற்கு பதிலாக சுண்ணாம்பு அரிசி அல்லது உடைந்த அரிசியை மாற்றாகப் பயன்படுத்துவது பொருத்தமானது என்று பரிந்துரைத்துள் ளது.



# யாழ். மாவட்ட பொலிஸ்புலனாய்வு பிரிவால் கசிப்பு காச்சிய இருவர் அதிரடியாக கைது!

யாழ்.மாவட்ட பொலிஸ் புலனாய்வு பிரிவுக்கு கிடைத்த இரகசிய தகவ லடிப்படையில் நீர்வேலியில் வீட்டில் வைத்து கசிப்பு காய்ச்சியபோது இலுவர் கைதுசெய்யப்பட்டனர்.

40 வயது பெண்ணும் 35 ஆணும் கைதுசெய்யப்பட்டதுடன், 20 லீற்றர் க சிப்பு 50 லீற்றர் கோடா கசிப்பு காச்சிய உபகரணங்களும் கைப்பற்றப்பட்டன. நீண்ட கால கசிப்பு உற்பத்தி வியாபாரம் முறியடிக்கப்பட்டதாக பொலிஸார் தெரி வித்தனர்.

மேலும் கைது செய்யப்பட்ட சந்தேக நபர் சான்றுப் பொருள்கள் கோப்பாய் பொலிஸ் நிலையத்தில் பாரப்படுத்தப் பட்டுள்ளன.



இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551 A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 04.11.2022இல் வெளியிடப்பெற்றது.